கானக நாடன் கலவான் என் தோள்! என்று, -
மான் அமர் கண்ணாய்! - மயங்கல் நீ! நானம்
கலந்து இழியும் நல் மலைமேல் வால் அருவி ஆட,
புலம்பும் அகன்று நில்லா!

My friend endowed with eyes resembling those of a doe's! Do not lose your wisdom thinking that the chief of a forest domain will not embrace my shoulders. If I sport in the white cascade that flows down mingling with many sweet fragrance in his domain, the grief of my shoulders will leave for good![7] (The hero stands concealed when the heroine speaks in praise of the former, as a reply to her companion who pretended to speak ill of him.)

---

7. Refer the following verses : Narr : 236
   Kuru : 23, 249, 361; Akam : 129, 378

14

தோழி தலைமகட்கு மெலிதாகச் சொல்லி, குறை நயப்புக் கூறியது

புனை பூந் தழை அல்குல் பொன் அன்னாய்! சாரல்
தினை காத்து இருந்தேம் யாம் ஆக, வினை வாய்த்து
மா வினவுவார் போல வந்தவர் நம்மாட்டுத்
தாம் வினவல் உற்றது ஒன்று உண்டு.

Friend like the goddess of plenty, your forelap adorned with bunches of flowers and leaves! When we were on the guard

of the millet crops in the hill slope, he came here and enquired us of the whereabouts of the beast he struck with arrow. But I feel there is something else he wishes to know from us.
(The confidante suggests to her friend that she should yield to the hero's wishes.)

15

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தாய் கேட்டதற்கு மறுமாற்றம் சொல்லுவாள் போலப் படைத்து மொழி கிளவியான் வரைவு கடாயது

வேங்கை நறு மலர் வெற்பிடை யாம் கொய்து,
மாந் தளிர் மேனி வியர்ப்ப, மற்று ஆங்கு எனைத்தும்
பாய்ந்து அருவி ஆடினேம் ஆக, பணிமொழிக்குச்
சேந்தனவாம், சேயரிக் கண்தாம்.

Our bodies which shone like the tender mango shoots sudated due to our plucking the fragrant flowers of the Vēṅkai tree on the hill. We sported in every cascade there. This was cause for the reddening of the eyes of my soft-spoken friend![8]
(The hero stands nearby during day tryst when the confidante speaks in the pretext of answering the question of her mother to urge him to wed the heroine early.)

---

8. Kuṟuntokai : 354

16

இரவுக்குறி வந்து பெயரும் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது

கொடு வரி வேங்கை பிழைத்து, கோட்பட்டு, -
மடி செவி வேழம் - இரீஇ, அடி ஓசை
அஞ்சி, ஒதுங்கும் அதர் உள்ளி, ஆர் இருள்
துஞ்சா, சுடர்த்தொடி கண்

You tread during densely dark midnight, a fearful path where a bent - eared elephant withdraws and walks away in gentle steps, after having escaped from the grip of a tiger with curved stripes on its body. On the thought of this path, the eyes of this girl, adorned with gleaming bracelets refuse to close in sleep.
(The confidante urges the hero to wed her friend early when he returns after a night - meeting with the heroine.)

17

இதுவுமது
மஞ்சு இவர் சோலை வள மலை நல் நாட!
எஞ்சாது நீ வருதி என்று எண்ணி, அஞ்சி,
திரு ஒடுங்கும் மென் சாயல் தேம் கோதை மாதர்
உரு ஒடுங்கும், உள் உருகி நின்று.

O chief of a fertile mountain dight with groves on whose summit rain clouds crawl! My friend whose hair is adorned with fragrant wreaths of flowers and who excels in charm even the goddess of plenty is anguished and grows weak as you cease not to visit here every day by night.
(The same situation)

18

தோழி செறிப்பு அறிவுறீஇ, தலைமகனை வரைவு கடாயது
எறிந்து, எமர்தாம் உழுத ஈர்ங் குரல் ஏனல்,
மறந்தும், கிளி இனமும் வாரா; - கறங்கு அருவி
மா மலை நாட! - மடமொழிதன் கேண்மை
நீ மறவல் நெஞ்சத்துக் கொண்டு.

O chief of a country with a high mountain with dinsome cascades! The flocks of parrots will not visit even due to their forgetfulness our millet - field, which our elders

ploughed after having cleared the forest. May you treasure in your heart, the kinship of my friend whose words express her innocence!
(The confidante urges the hero to wed her friend early suggesting to him of the confinement of the heroine to her home.)

19

தோழி இரவுக்குறியின்கண் நெறி விலக்கி, வரைவு கடாயது

நெடு மலை நல் நாட! நீள் வேல் துணையா,
கடு விசை வால் அருவி நீந்தி, நடு இருள்,
இன்னா அதர் வர, ஈர்ங் கோதை மாதராள்
என்னாவாள்! என்னும், என் நெஞ்சு.

O chief of a high mountain! My heart is squeezed by anguish with the thought as to how my friend who sports cool flower - wreaths will endure pains, as you visit here by night through a perilous path, swimming against swift - flowing streams and silvery cascades, having no other support but your spear.
(The confidante urges the hero to wed her friend early)

20

தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்று வெறி விலக்கவேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது

வெறி கமழ் வெற்பன் என் மெய்ந் நீர்மை கொண்டது
அறியாள் மற்று அன்னோ! அணங்கு அணங்கிற்று! என்று,
மறி ஈர்த்து உதிரம் தூய், வேலன் - தரீஇ,
வெறியோடு அலம்வரும், யாய்.

Alas, our mother is quite ignorant. She has failed to realise that the chief of a mountain full of sweet fragrance stole away the charm of my body. She worries herself with the belief

that my present illness is the work of a deity. She has invited the vēlan who would sacrifice a goat and sprinkle its blood as an offering to lord Murukan.
(The heroine speaks to her confidante exposing her love affair.)

3. மருதம்

21

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது

கொண்டுழிப் பண்டம் விலை ஒரீஇக் கொற்சேரி
நுண் துளைத் துன்னூசி விற்பாரின், ஒன்றானும்
வேறு அல்லை, - பாண! - வியல் ஊரன் வாய்மொழியைத்
தேற, எமக்கு உரைப்பாய், நீ.

3. Marutam

O bard clearly passing on the messages of the chief of a town to us! You are in no way different from the merchants who barter the stitching needles with fine eyes for a price, many times higher than the cost price in the streets of the ironsmiths.[9]
(The heroine disallows entry to the bard)

9. Palmolinānūru - 50.

22

இதுவுமது

போது ஆர் வண்டு ஊதும் புனல் வயல் ஊரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண மகனே! நீதான்
அறிவு அயர்ந்து, எம் இல்லுள் என் செய்ய வந்தாய்?
நெறி அதுகாண், எங்கையர் இற்கு.

O bard roaming about as the messenger of the chief of a village with water - rich fields full of flowers buzzed by bees! What for did you come to our house with your confused mind? Look there! It is the way which leads you to the houses of our younger sisters![10]
(The same situation)

10. Akanāṉūṟu - 56

23

இதுவு மது
யாணர் அகல் வயல் ஊரன் அருளுதல், -
பாண! - பரிந்து உரைக்க வேண்டுமோ? மாண
அறிவது அறியும் அறிவினார் கேண்மை
நெறியே உரையாதோ மற்று?

O bard! Should you speak at length to us of the love towards us of the chief of a plain fetching ceaseless revenue? Their gracefulness itself will speak aloud of the greatness of the kinship of the noble men endowed with discerning wisdom.
(The same situation)

24

இதுவு மது
கோலச் சிறு குருகின் குத்து அஞ்சி, ஈர் வாளை
நீலத்துப் புக்கு ஒளிக்கும் ஊரற்கு, மேல் எல்லாம்,
சார்தற்குச் சந்தனச் சாந்து ஆயினேம்; இப் பருவம்
காரத்தின் வெய்ய, என் தோள்!

He is the chief of a village where a cool vāḷai fish dreads the pecking of a heron which is small but beautiful, and hides itself among the flowers of blue lily. There was a time when we were desirable for him like the sandal cream. Alas, now

my arms have turned as hot as the alkali meant for healing wounds.[11]
(The same situation)

---

11. Ref. Kumbakaruṇan̲ vataippadalam, Kamparāmāyanam, verse : 141.

25

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது

அழல் அவிழ் தாமரை ஆய் வயல் ஊரன்
விழைதகு மார்பம் உறும், நோய் - விழையின்,
குழலும் குடுமி என் பாலகன் கூறும்
மழலை வாய்க் கட்டுரையால்.

The entising breast of the chief of a fertile domain with fields where fire-like lotus flowers blossom forth will grieve should he return here attracted by the lisping words of my son with his curly tuft.
(The hero turns down the request of the hero's envoys)

26

புதல்வனை முனிந்து, தலைமகள் மறுத்தாளைப் போல, தோழிக்கு வாயில் நேர்ந்தது

பெய் வளைக் கையாய்! பெரு நகை ஆகின்றே -
செய் வயல் ஊரன் வதுவை விழவு இயம்ப,
கை புனை தேர் ஏறிச் செல்வானைச் சென்று இவன்
எய்தி, இடர் உற்றவாறு!

O bangled friend! The chief of the village rich in arable lands rode on his ornate chariot to visit his hetaira's house where wedding drums rumbled. At that time this little boy appeared before him and prevented his going. This trouble undergone by our man evoked great fun in me![12]

(The heroine accepts the counselling of her friend pretending to find fault with her son)

12. Ref. verse 66 of Akanāṉūṟu.

27

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது

தண் வயல் ஊரற் புலக்கும் தகையமோ? -
நுண் அறல் போல நுணங்கிய ஐங் கூந்தல்,
வெண் மரல் போல நிறம் திரிந்து, வேறாய
வண்ணம் உடையேம், மற்று யாம்.

There was a time when our tresses resembled the black and fine sand in the stream. Such tresses have now changed and resemble the blades of white maral! As such, are we qualified to sulk with the chief of a village of water - rich fields?
(The heroine refuses entry to the messengers of the hero.)

28

தலைமகள் தோழிக்கு வாயில் மறுத்தது

ஒல்லென்று ஒலிக்கும் ஒலி புனல் ஊரற்கு
வல்லென்றது என் நெஞ்சம் - வாட்கண்ணாய்! - நில் என்னாது,
ஏக்கற்று ஆங்கு என் மகன்தான் நிற்ப, என்னானும்
நோக்கான், தேர் ஊர்ந்தது கண்டு.

Bright - eyed friend! I saw with my own eyes how our lover rode to his hetaira's house, refusing to look at my son who stood on his way, longing for his father's love. He did not bid his charioteer to stop the chariot. So my heart does not melt for the chief of the plain with dinsome water resources.[13]
(The heroine turns down the counselling of her confidante.)

13. This stands in contrast to the previous one in which the hero stops his chariot and takes his son and gets into his home.

29

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின்பு, சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது

ஒல்லென் ஒலி புனல் ஊரன் வியல் மார்பம்
புல்லென் யான் என்பேன்; - புனையிழையாய்! - புல்லேன்
எனக்கு ஓர் குறிப்பும் உடையேனோ, ஊரன் -
தனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன்?

One of ornate jewels! I would remain determined not to embrace the wide breast of the chief of the village of noisy waters. (before seeing him) But being duty - bound to serve him (as his wife) I have the propriety to refuse to embrace him when I see him.[14]
(The heroine speaks to her visiting companion after the hero had left from his home after enjoying union with his wife.)

---

14. Refer verse 181 of Kuruntokai.

30

இதுவும் அது

குளிரும் பருவத்தே ஆயினும், தென்றல்
வளி எறியின், மெய்யிற்கு இனிதாம்; . ஒளியிழாய்! -
ஊடி இருப்பினும், ஊரன் நறு மேனி
கூடல் இனிது ஆம், எனக்கு.

One of glittering ornaments! The wafting southern wind is sweet to the body even though the season is rainy. The fragrant body of my lover who is the chief of a plain is sweet to embrace even when I am in the sulking mood.
(The same situation)

4. பாலை

31

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

உதிரம் துவரிய வேங்கை உகிர்போல,
எதிரி முருக்கு அரும்ப, ஈர்ந் தண் கார் நீங்க, எதிருநர்க்கு
இன்பம் பயந்த இளவேனில் காண்தொறும்,
துன்பம் கலந்து அழியும், நெஞ்சு.

4. Pālai

Spring is the season when the murukku trees are full of buds resembling the blood - stained claws of a tiger and when the cool clouds disappear and the lovers meet and enjoy bliss. Whenever I see this season, my heart gets squeezed by grief. (The separated heroine speaks to her friend at the advent of the spring.)

32

தலைமகனது பிரிவுக் குறிப்பு அறிந்து ஆற்றளாய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது

விலங்கல்; விளங்கிழாய்! செல்வாரோ அல்லர்
அழல் பட்டு அசைந்த பிடியை, எழில் களிறு,
கல் சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையால் கொண்டு,
உச்சி ஒழுக்கும் சுரம்.

Friend endowed with shining jewels! Our lover will not choose to tread the wilderness in which a beautiful tusker sucks the scarce and muddy water from a rocky spring and pours it on the head of its mate which grieves engulfed by a wild fire. Do not attempt to persuade him not to part from you. (The companion of the heroine consoles her friend when the latter feared that her man will part from her.)

33

மகட் போக்கிய நற்றாய் கவன்று சொல்லியது

பாவையும், பந்தும், பவளவாய்ப் பைங் கிளியும்,
ஆயமும், ஒன்றும், இவை நினையாள்; பால் போலும்
ஆய்ந்த மொழியினாள் செல்லும்கொல், காதலன்பின்,
காய்ந்து கதிர் தெறூஉம் காடு?

My beloved's words are sweet like milk. I am anguished that she cannot endure the pain of walking behind her lover in the wilderness, parched by blazing fire, forgetting her doll, ball, the - red - beaked pet-parrot and her play mates.[15]
(The mother grieves thus after her daughter's elopement with her lover.)

15. Refer verse 49 and Narr : 12, 143

34

தோழி தலைமகனைச் செலவு அழுங்கியது

கோட்டு அமை வல் வில் கொலை பிரியா வன்கண்ணர்
ஆட்டிவிட்டு ஆறு அலைக்கும் அத்தம் பல நீந்தி,
வேட்ட முனைவயின் சேறிரோ - ஐய! - நீர்
வாள் தடங் கண் மாதரை நீத்து?

O chief! Are you set to travel through many a barren wilderness infested with the hard - hearted highwaymen, who are inseparable from their murderous nature and who plunder the possessions of the way-farers? Will you cross the wastelands where the hunters live, forsaking your long-eyed spouse?
(The companion of the heroine prevents the hero from parting from his wife.)

35

தலைமகன் பொருள்வயின் பிரிந்த காலத்து, ஆற்றாள்! எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள், ஆற்றுவல் என்பதுபட மொழிந்தது

கொடு வில் எயினர் தம் கொல் படையால் வீழ்த்த
தடி நிணம் மாந்திய பேஎய், நடுகல்
விரி நிழல், கண்படுக்கும் வெங் கானம் என்பர்,
பொருள் புரிந்தார் போய சுரம்.

It is said that in the hazardous wilderness which our lover treads, questing after riches, where a ghoul that ate abundant flesh of those men who fell dead by the attack of the murderous weapons of the hunters with bent bows, now sleeps under the shade of a hero - stone.
(The heroine says that she can endure the pangs of separation when her spouse is abroad seeking wealth.)

36

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது

கடிது ஓடும் வெண்தேரை, நீர் ஆம் என்று எண்ணி,
பிடியோடு ஒருங்கு ஓடி, தாள் பிணங்கி, வீழும்
வெடி ஓடும் வெங் கானம் சேர்வார்கொல், - நல்லாய்! -
தொடி ஓடி வீழத் துறந்து?

O my good friend! Will my lover part from me causing my bangles slip off? Will he tread the hazardous and painful wilderness when tuskers and their mates run after mirages, taking them for real water and fall down their legs getting exhausted?
(The heroine speaks to her friend who informed her of the parting of the hero.)

37

உடன் போய தலைமகட்கு நற்றாய் கவன்று உரைத்தது

தோழியர் சூழத் துறை முன்றில் ஆடுங்கால்,
வீழ்பவள் போலத் தளரும் கால், தாழாது,
கல் அதர் அத்தத்தைக் காதலன்பின் போதல்
வல்லவோ, மாதர் நடை?

My daughter's legs would grow weak as if they would cause her fall down even while she sported in the fords with her mates. Are such legs now strong enough to follow her lover through the wasteland full of pebbles?[16]
(The mother feels for her eloped daughter.)

16. Akanāṉūṟu : 17

38

பிரிவின்கண் ஆற்றாளாயின தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது

சுனை வாய்ச் சிறு நீரை, எய்தாது என்று எண்ணி,
பிணை மான் இனிது உண்ண வேண்டி, சுலைமா தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர், காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

It is said that the path which our lover travels now is so barren that a buck which desires its loving mate to slake its thirst pretends to drink the scarce water in a dry spring, thinking that it will not be sufficient for both.[17]
(The companion of the heroine consoles her friend after the hero had gone abroad.)

17. Standing near water and thirsty,
The stag wants the doe to drink first
The doe the stag - Gatha Saptha Sathi - 763

39

தலைமகன் பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது

மடவைகாண்; - நல் நெஞ்சே! - மாண் பொருள் மாட்டு ஓட,
புடைபெயர் போழ்தத்தும் ஆற்றாள், படர் கூர்ந்து
விம்மி உயிர்க்கும் விளங்கிழையாள் ஆற்றுமோ,
நம்மின் பிரிந்த இடத்து?

Our sweet beloved with glittering jewels would heave deep sighs and sob out of anguish, even when our clasp gets loosened for a while. Will such a girl endure our separation when you go in quest of your fortune?[18]
(The hero gives up his proposed journey in quest of riches)

---

18. Refer Akanāṉūṟu : 225

40

இதுவுமது

இன்று அல்கல் ஈர்ம் படையுள் ஈர்ங்கோதை தோள் துணையா
நன்கு வதிந்தனை; - நல் நெஞ்சே! - நாளை நாம்
குன்று அதர் அத்தம் இறந்து, தமியமாய்,
என்கொலோ சேக்கும் இடம்?

My good heart! You stay here this night, hugging the shoulders of our sweet who wears wreaths of cool flowers. Alas, what could be the place of our stay tomorrow, after treading all alone, the wellnigh impassable path that courses through small hills?
(The same situation)

5. நெய்தல்

41

அல்லகுறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய், தோழி தலைமகட்குச் சொல்லியது

தெண் கடற் சேர்ப்பன் பிரிய, புலம்பு அடைந்து,
ஒண் தடங் கண் துஞ்சற்க! - ஒள்ளிழாய்! - நண்பு அடைந்த
சேவலும் தன் அருகில் சேக்குமால்; என்கொலோ,
பூந் தலை அன்றில் புலம்பு?

5. Neytal

One of shining ornaments ! May your eyes, large and lustrous lose sleep, unable to endure loneliness due to the separation of our lover, the chief of a seashore. What could be the reason why the female of the A<u>nr</u>il with a red-flower-like crest on her head grieves, even when her loving mate abides nearby?
(The confidante speaks to the heroine pretending to speak to the hero who missed the tryst).

42

காமம் மிக்க கழிபடர் கிளவி

கொடுந் தாள் அலவ! குறை யாம் இரப்பேம்;
ஒடுங்கா ஒலி கடற் சேர்ப்பன் நெடுந் தேர்
கடந்த வழியை எம் கண் ஆரக் காண,
நடந்து சிதையாதி, நீ!

O bent-legged crab! A request to you! The chief of a seashore rode on his tall chariot. Pray do not spoil by your

crawlings, the impress of his chariot-wheels so that my eyes will rejoice at its sight.[19]
(The heroine speaks in her mood of excessive passion).

---

19. My lover rode away in his chariot with fleetness
Of bird-flight, and the waves erased the impress
Of the chariot - wheels : What then shall I do?
If you too are like this, what shall I do?
- Cilappatikāram, 7 : 202 - 05

43

இதுவு மது
பொரிப் புறப் பல்லிச் சினை ஈன்ற புன்னை
வரிப் புற வார் மணல்மேல் ஏறி, தெரிப்புறத்
தாழ் கடல் தண் சேர்ப்பன் தார் அகலம் நல்குமேல்,
ஆழியால் காணாமோ, யாம்!

Let us know by drawing kūṭal[20] if our man, the chief of a deep-watered sea-shore land will rest with us on the striped sand dune covered with the punnai buds resembling the speckled eggs of the lizard and offer his garlanded chest to us.
(The same situation).

---

20. Loops drawn on sand by a love-lorn lady for divining the safe arrival of her lord : (Tamil Lexicon, Madras, P. 1068, 1982)

44

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாக, படைத்து மொழி கிளவியால் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், செறிப்பு அறிவுறீஇ, வரைவு கடாயது
கொண்கன் பிரிந்த குளிர் பூம் பொழில் நோக்கி,
உண்கண் சிவப்ப அழுதேன் ஒளி முகம்
கண்டு, அன்னை, எவ்வம் யாது? என்ன, கடல் வந்து என்
வண்டல் சிதைத்தது என்றேன்.

I wept causing my khol-fed eyes turn red looking at the cool and beautiful grove, from where our lover, the chief of a seashore land parted from me. Our mother looked at my gleaming face and asked of me the reason for it. I said that the sea waves had destroyed the sand-house which I built on the shore.[21]
(The confidante pretends to speak to her heroine and urges the hero who waits concealed to wed her friend soon).

---

21. Did we not see, chieftain, your friend?
She would gather the fine sand and fill up the sea
Since it engulfed her mud-toy
- Ainkurunūru, 124. (Tr.P. Jothimuttu)

45

தலைமகனைத் தோழி வரைவு கடாதற்பொருட்டுத் தலைமகள் வரைவு வேட்டுச் சொல்லியது

ஈர்ந் தண் பொழிலுள், இருங் கழித் தண் சேர்ப்பன்
சேர்ந்து, என் செறி வளைத் தோள் பற்றித் தெளித்தமை, -
மாந் தளிர் மேனியாய்! - மன்ற விடுவனவோ,
பூந் தண் பொழிலுள் குருகு?

Girl with your tender body like the cool mango shoot! The chief of the cool shore with creeks enjoyed my company amidst an extremely cool grove and made affirmations, holding my bangled hands. Will the birds that live in that grove, cool and charming, forget it so easily.
(The heroine expresses her wish for early wedding by way of requesting her confidante to urge the hero to wed her eft soon.)

46

பகற்குறி வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்ணுற்று நின்று தோழி வரைவு கடாயது

ஓதம் தொகுத்த ஒலி கடல் தண் முத்தம்
பேதை மடவார் தம் வண்டல் விளக்கு அயரும்
கானல் அம் சேர்ப்ப! தகுவதோ, என் தோழி
தோள் நலம் தோற்பித்தல் நீ?

O chief of a beautiful shore in whose groves young girls play building sand-houses using the cool pearls washed ashore by the roaming sea-waves as lamps! Is it just on your part to cause the shoulders of my friend droop?
(The confidante urges the hero to wed her friend soon, as he leaves after meeting his beloved during day by tryst.)

47

தோழிக்குத் தலைமகன் சொல்லியது; தோழற்குச் சொல்லியதூஉம் ஆம்

பெருங் கடல் உள் கலங்க, நுண் வலை வீசி,
ஒருங்குடன் தன்னைமார் தந்த கொழு மீன்
உணங்கல் புள் ஓப்பும் ஒளி இழை மாதர்
அணங்கு ஆகும், ஆற்ற எமக்கு.

The girl adorned with glittering jewels who guards against the birds the drying succulent fishes, which all her brothers joined together and brought ashore casting their nets woven with fine threads and causing the fathoms of the vast sea turn muddy caused me great grief like a deity.
(The hero speaks to the confidante or to his companion).

48

தலைமகனைத் தோழி வரைவு கடாயது

எக்கர் இடு மணல்மேல் ஓதம் தர வந்த
நித்திலம் நின்று இமைக்கும் நீள் கழித் தண் சேர்ப்ப!

மிக்க மிகு புகழ் தாங்குபவோ, தற் சேர்ந்தார்
ஒற்கம் கடைப்பிடியாதார்?

O chief of a seashore land where the pearls that were washed ashore by the waves now lie and glitter on the banks of creeks flooded and cool! Can those men earn high renown-those who do not hold fast as their avowed duty, the act of wiping off the distress of their near kin.
(The confidante urges the hero to wed the heroine early).

49

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறிய, தலைமகன்
சிறைப்புறத்தானாக, தோழி சொல்லியது
கொடு முள் மடல் தாழைக் கூம்பு அவிழ்ந்த ஒண் பூ
இடையுள் இழுது ஒப்பத் தோன்றி, புடை எலாம்
தெய்வம் கமழும் தெளி கடல் தண் சேர்ப்பன்
செய்தான், தெளியாக் குறி.

Our lover is the lord of a land on the shore of the cool and clear-watered sea. Here the screwpine bushes, with crooked thorns and long blades blossom and their central pith, (stamens) appears like butter that issues forth divinely sweet fragrance. He made a sign beyond our comprehension when he came to the trysting place.
(The confidante speaks to the hero who stands nearby so that he may realise the heroine returned missing the tryst.)

50

இதுவுமது
அணி கடல் தண் சேர்ப்பன் தேர்ப் பரிமாப் பூண்ட
மணி அரவம் என்று, எழுந்து போந்தேன்; கனி விரும்பும்
புள் அரவம் கேட்டுப் பெயர்ந்தேன், - ஒளியிழாய்! -
உள் உருகு நெஞ்சினேன் ஆய்.

O girl with glittering jewels! I rushed to the street with the thought that it was the tinkling of the bells worn around the necks of the horses that pulled the chariot of the chief of the cool seashore land. Alas, I returned with a heart burdened with grief, when I learnt it was only the chirping of the fruit-loving birds![22]
(The same situation.)

---

22. We hear a sound from yonder!
Is it the tinkling of the bells
Worn around the necks of lovely cows
Which now return home, with their bulls,
During this evening, after having grazed grass to their fill?
If not, could if be the chiming of the bells
Adorning our lover's charriot who returns
With a satisfied heart
After having accomplished his mission.
- Kuṟ : 275 (Tr. A. Dakshinamurthy)

சிறப்புப் பாயிரம்

பண்பு உள்ளி நின்ற பெரியார் பயன் தெரிய,
வண் புள்ளி மாறன் பொறையன் புணர்த்து யாத்த
ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்,
செந்தமிழ் சேராதவர்.

Invocation

Aintiṇai Aimpatu is the work composed by māṟaṉ poṟaiyaṉār the expert mathematician to help the wise who ever wish to realise the human virtues to understand the nuances of the theme of Akam poetry.. Those who fail to study this, cannot enjoy the sweetness of the chaste Tamil language.

– **Māṟāṉ Poṟaiyaṉār**

✿ ✿ ✿

ஐந்திணை எழுபது

(மூவாதியார்)

1. குறிஞ்சி

1

தோழி தலைமகனை வரைவு கடாயது

அவரை பொருந்திய பைங் குரல் ஏனல்
கவரி மட மா கதூஉம் படர் சாரல்
கானக நாட! மறவல், வயங்கிழைக்கு
யான் இடை நின்ற புணை.

Aintiṇai Eḻupatu

1. Kuṟiñci

O chief of a wide montane region where the young Kavari deer grazes gripping with its mouth the green-grained millet crops together with the country beans thriving in their midst! Forget not the truth that I served you both, to foster your kinship.

(The confidante of the heroine insists the hero upon wedding her friend)

2

வரைவு தலைவந்தமை கண்டு மகிழ்ந்த தலைமகள் தோழிக்குக் கூறியது

கொல்லைப் புனத்த அகில் சுமந்து, கல் பாய்ந்து,
வானின் அருவி ததும்ப, கவினிய
நாடன் நயம் உடையன் என்பதனால், நீப்பினும்,
வாடல் மறந்தன, தோள்.

In our lover's hilly country, cascade caused by the rains spreads all over the land, carrying in its current, the akil wood in the millet field and thus adds to the land's greatness. He being one of sterling qualities, my shoulders forgot to droop in spite of his parting from me.
(The heroine speaks to her confidante when the hero came prepared to wed her.)

3

தோழி தலைமகன் வரைவு மலிந்தமை தலைமகட்குச் சொல்லியது

இலை அடர் தண் குளவி வேய்ந்த பொதும்பில்,
குலையுடைக் காந்தள், இன வண்டு இமிரும்
வரையக நாடனும் வந்தான்; மற்று அன்னை
அலையும் அலை போயிற்று, இன்று.

Our lover, the chief of a montane region where swarms of bees buzz the bunches of Kāntaḷ plants in the groves where the cool and leafy jasmine creepers grow thick has come with the proposal to wed you. We are freed from the torture of our mother from today.
(The confidante informs her friend, the consent of the hero to wed her)

4

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது

மன்றப் பலவின் சுளை விளை தீம் பழம்
உண்டு, உவந்து, மந்தி முலை வருட, கன்று அமர்ந்து,
ஆமா சுரக்கும் அணி மலை நாடனை
யாமாப் பிரிவது இலம்.

A she-monkey eats the sweet drupels of the jack fruit in the commonyard and strokes the udder of a wild cow that lies beneath a tree, when the animal gives milk as if it would feed its calf. Such is the country full of natural scenes of our lover. We cannot afford to get separated from him all through our life.
(The hero stands nearby concealed when the heroine speaks in praise of him in response to her confidante who pretended to blame him.)

5

இதுவுமது
சான்றவர் கேண்மை சிதைவு இன்றாய், ஊன்றி,
வலி ஆகி, பின்னும் பயக்கும்; மெலிவு இல்
கயம் திகழ் சோலை மலை நாடன் கேண்மை
நயம் திகழும் என்னும், என் நெஞ்சு.

My heart is confident that the kinship of the chief of the mountain abounding in ponds which make the groves fertile will be abundantly sweet like the friendship with the virtuous, which does not suffer set back but remains deep-rooted and which serves as a prop and deliveres more and more benefits.
(The same situation)

6

புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்டு தோழி வரைவு கடாயது
பொன் இணர் வேங்கை கமழும் நளிர் சோலை
நல் மலை நாட! மறவல்; வயங்கிழைக்கு
நின் அலது இல்லையால்; ஈயாயோ, கண்ணோட்டத்து
இன் உயிர் தாங்கும் மருந்து?

O lord of a goodly mountain full of cool groves where the Vēṅkai trees disseminate sweet fragrance of the golden bunches of flowers! Do not fail to protect this dame adorned with flashing jewels, as she has no other prop but you. Let your grace save her sweet life.
(The confidante insists the hero upon wedding the heroine soon, when he leaves after having a meeting with his beloved)

7

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாக, படைத்து மொழி கிளவியால் தோழி வரைவு கடாயது

காய்ந்தீயல், அன்னை! இவளோ தவறு இலள்; -
ஓங்கிய செந் நீர் இழி தரும் கான் யாற்றுள்,
தேம் கலந்து வந்த அருவி குடைந்து ஆட,
தாம் சிவப்பு உற்றன, கண்.

Pray do not be angry! This girl is faultless! Her eyes have turned red due to her bathing in the honey-mixed red floods in the wild stream. (The confidante insists the hero during day tryst, on wedding the heroine when he stands concealed nearby, pretending to speak to her mother.)

8

புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்டு தோழி வரைவு கடாயது

வெறி கமழ் தண் சுனைத் தெண்ணீர் துளும்ப,
கறி வளர் தே மா நறுங் கனி வீழும்
வெறி கமழ் தண் சோலை நாட! ஒன்று உண்டோ,
அறிவின்கண் நின்ற மடம்?

O chief of a country with groves filled with the sweet fragrance of flowers, where the delicious and sweet-smelling fruit of the mango trees, entwined with pepper vines fall into

the cool and odorous spring, causing its clear water get disturbed. Is your intellect stained with ignorance? (Never!) (The confidante insists on the hero to wed the heroine betimes when he leaves after having a meeting with his beloved)

9

தலைமகன் சிறைப்புறத்தானாக, இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது

மன்றத் துறுகல் கருங் கண் முசு உகளும்
குன்றக நாடன் தெளித்த தெளிவினை
நன்று என்று தேறித் தெளிந்தேன், தலையளி
ஒன்று; மற்று ஒன்றும் அனைத்து.

Our lover is the chief of a hilly country where the black-eyed monkeys take delight in frolicking on the boulders in the commonyard. I put my trust in the affirmations he made to me. He showered on me his affection. I am quite confident his affection is sustaining.
(When the hero waits nearby concealing, the heroine refutes the adverse statement of the confidante with the purpose to read her mind)

10

தோழி தலைமகனைக் கண்டு வரைவு கடாயது

பிரைசம் கொளா வீழ்ந்த தீம் தேன் இறால்
மரையான் குழவி குளம்பின் துகைக்கும்
வரையக நாட! வரையாய் வரின், எம்
நிரைதொடி வாழ்தல் இலள்.

O chief of hills where the calves of the wild cows trample with their hooves, the sweet honeycombs which slipped off the hands of the hunters. If you continue your clandestine visits here without wedding my friend, she will cease to live.

(The confidante insists on the hero to wed the heroine betimes.)

11

தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் கேட்ப, இயற்பட மொழிந்தது

கேழல் உழுத கரி புனக் கொல்லையுள்,
வாழை முது காய் கடுவன் புதைத்து அயரும்
தாழ் அருவி நாடன் தெளி கொடுத்தான், என் தோழி
நேர்வளை நெஞ்சு ஊன்று கோல்.

Our lover is the chief of a hilly domain full of cascading streams where male monkeys bury in the ground, the ripened plantain fruit and then are annoyed in finding them out in the millet gardens, which the wild boars ploughed and where the hunters set fire to bushes and trees. He made his affirmations to my bangled friend. They were as certain as an arrow that struck at her heart.
(The heroine refutes the adverse remarks of the confidante when the hero stands nearby concealed)

12

தலைமகன் சிறைப்புறத்தானாக, இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது

பெருங் கை இருங் களிறு ஐவனம் மாந்தி,
கருங் கால் மராம் பொழில் பாசடைத் துஞ்சும்,
சுரும்பு இமிர் சோலை, மலை நாடன் கேண்மை
பொருந்தினார்க்கு ஏமாப்பு உடைத்து.

Our lover is the lord of a hilly domain where a long-trunked and huge tusker feeds on the aivanam grains and then sleeps on the bed of green leaves in the shade of Marām trees with

black base in the grove full of buzzing bee-hives. His kinship is ever a safety to those who trust him.
(The heroine praises the hero in response to her confidante's words blaming him, to be heard by the hero who stands concealed near the fence)

13

வெறியாட்டு எடுத்துக்கொண்ட இடத்து, தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது

வார் குரல் ஏனல் வளை வாய்க் கிளி கவரும்,
நீரால் தெளி திகழ், கான் நாடன் கேண்மையே
ஆர்வத்தின் ஆர முயங்கினேன்; வேலனும்
ஈர, வலித்தான், மறி.

He is the chief of a montane region with groves, extremely charming by the bent-beaked parrots which pluck away long ears of millet crops. His kinship alone I preferred out of love for him. So the Vēla<u>n</u> too decided to sacrifice a tender goat, mistaking my growing weak was due to the affliction of Muruka<u>n</u>.
(The heroine discloses her love affair to her friend when her mother conducts the frenzied dance)

14

தலைமகன் வரும் வழியின் ஏதத்திற்குக் கவன்ற தலைமகள் வரைவு வேட்டு, தோழிக்குச் சொல்லியது

குறை ஒன்று உடையேன்மன்; - தோழி! - நிறை இல்லா
மன்னுயிர்க்கு ஏமம் செயல் வேண்டும்; இன்னே,
அரா வழங்கு நீள் சோலை நாடனை நம் இல்,
இரா வாரல் என்பது உரை.

You have to fulfil a wish of mine, my friend. You need to do something to save my life which stays not in a state. Pray

tell our man not to visit our neighbourhood henceforth by night, as it is infested with roaming snakes.
(The heroine, out of fear of the dangers in the path which her lover takes to meet her, requests her friend to urge the hero to wed her betimes)

2. முல்லை

15

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

செங் கதிர்ச் செல்வன் சினம் கரந்த போழ்தினால்,
பைங் கொடி முல்லை மணம் கமழ, வண்டு இமிர,
காரோடு அலமரும் கார் வானம் காண்தொறும்
நீரோடு அலமரும், கண்.

2. Mullai

Every time I behold the cloudy sky which joins hands with the rainy season, when during the evening the sun's heat gets abated and the fresh mullai flowers issue forth their fragrance and the bees buzz with their sweet humming, my eyes become tearful owing to my grief.
(The heroine speaks to her confidante at the advent of the rainy season)

16

இதுவுமது

தட மென் பணைத் தோளி! நீத்தாரோ வாரார்;
மட நடை மஞ்ஞை அகவ, கடல் முகந்து,
மின்னோடு வந்தது எழில் வானம்; வந்து, என்னை,
என் ஆதி? என்பாரும் இல்.

My friend of bamboo-like rounded and smooth shoulders! Our departed lover does not seem to return now. The comely clouds armed with lightning have drunk the water from the sea and they have caused the peacocks call aloud. I have no one who will come to me and ask, "How are you?".
(The same situation)

17

இதுவுமது
தண் நறுங் கோடல் துடுப்பு எடுப்ப, கார் எதிரி
விண் உயர் வானத்து உரும் உரற்ற, திண்ணிதின்
புல்லுநர் இல்லார் நடுங்க, சிறு மாலை,
கொல்லுநர் போல, வரும்.

The short-lived evening comes resembling murderers when the cool and fragrant white Kāntaḷ plants stand with oar-like flowers and when the thunderbolts amidst the clouds in the high heavens roam about welcoming the rainy season and when the separated women folk shiver out of unbearable grief.
(The same situation)

18

இதுவுமது
கதழ் உறை வானம் சிதற, இதழகத்துத்
தாது இணர்க் கொன்றை எரி வளர்ப்ப, பாஅய்
இடிப்பது போலும் எழில் வானம் நோக்கி,
துடிப்பது போலும், உயிர்.

The clouds forcefully scatter rain drops; the Koṉṟai trees with their flower-bunches appear as if they would hold fire; they spread all over and roar as if they would condemn somebody. Every time I behold such beautiful sky, I feel as if my soul would throb out of pain!
(The same situation)

19

இதுவு மது

ஆலி விருப்புற்று அகவி, புறவு எல்லாம்
பீலி பரப்பி, மயில் ஆல, சூலி
விரிகுவது போலும் இக் கார் அதிர, ஆவி
உருகுவது போலும், எனக்கு.

The rain-clouds have become gravid, causing the flocks of peacocks unfold their feathers and dance all through the woods, the while calling aloud coveting the rain drops. Lightnings flash out with loud roars as if they assist the clouds for easy delivery. This makes me feel as if my soul were melted in an oven.
(The same situation)

20

இதுவு மது

இனத்த அருங் கலை பொங்க, புனத்த
கொடி மயங்கு முல்லை தளிர்ப்ப, இடி மயங்கி,
யானும் அவரும் வருந்த, சிறு மாலை -
தானும் புயலும் வரும்.

The short-lived evening with thunderbolts, comes joining hands with the clouds, causing the flocks of stags to frolic and the mullai plants spread over by other creepers to let out fresh leaves, intending to cause pain to poor me and my beloved lover.
(The same situation)

21

இதுவு மது

காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்,
கார்க் கொடி முல்லை எயிறு ஈன, காரோடு
உடன்பட்டு வந்து அலைக்கும் மாலைக்கோ, எம்மின்
மடம் பட்டு வாழ்கிற்பார் இல்.

Even before the arrival of our lover, who parted from us, the rain-fed mullai plants have let out our teeth-like buds. As a result, there are no other folks who ignorantly wallow in suffering to hold their life-like us, who grieve due to the eventide which assails us joining hands with the rainy season, causing our beauty to dwindle and perish.
(The same situation)

22

இதுவுமது
கொன்றைக் குழல் ஊதிக் கோவலர் பின் நிரைத்து,
கன்று அமர் ஆயம் புகுதர, இன்று
வழங்கிய வந்தன்று, மாலை; யாம் காண,
முழங்கி, வில் கோலிற்று, வான்.

The cowherds, in rows return to their villages, following their herds of cows, full of love for their calves, the while blowing their Konrai pipes. Now the evening hour sets in to rule the world and the clouds too roar aloud and begin to pour rains, casting rain-bow across the heaven causing us to see and grieve.
(The same situation)

23

பருவம் கண்டு அழிந்த தலைமகள் சொல்லியது
தேரைத் தழங்குரல் தார் மணி வாய் அதிர்ப்ப,
ஆர் கலி வானம் பெயல் தொடங்கி, கார் கொள,
இன்று ஆற்ற வாரா விடுவார்கொல், காதலர்?
ஒன்றாலும் நில்லா, வளை.

My friend, The roaring clouds have started pouring and thus have commenced the rainy season. Would not our lover arrive here this day, mounted on his chariot, pulled by horses when the bells worn round their necks chime, resembling

the frogs' croaking, so that we can endure his separation.
(The same situation)

24

இதுவு மது

கல் ஏர் புறவில் கவினி, புதல்மிசை
முல்லை தளவொடு போது அவிழ, எல்லி
அலைவு அற்று விட்டன்று வானமும்; உண்கண்,
முலை வற்று விட்டன்று, நீர்.

In the pasture full of rocks, the jasmine as well as the Kuḷavi vines which spread on bushes have blossomed beautifully. All over the night, the clouds poured out rain non-stop. My khol-fed eyes too shed tears drenching my breasts.
(The same situation)

25

(இது முதல் துறைக்குறிப்புக்கள் கிடைக்கவில்லை.)

....

26

....

Note: The verses with the serial numbers 25 and 26 have not survived.

27

இதுவு மது

கார்ப்புடைப் பாண்டில் கமழ, புறவு எல்லாம்
ஆர்ப்பொடு இன வண்டு இமிர்ந்து ஆட, நீர்த்து அன்றி
ஒன்றாது அலைக்கும் சிறு மாலை, மால் உழந்து
நின்றாக நின்றது நீர்.

The Vēṅkai trees, fed by the rains blossom forth and issue forth sweet fragrance; the bee hives buzz and roam about all through the woods; the short-lived evening, devoid of virtue, torments me, turning inimical; as a result, my eyes remain perpetually tearful. (What shall I do?)
(The same situation)

28

இதுவு மது
குருந்து அலை வான் படலை சூடிச் சுரும்பு ஆர்ப்ப,
ஆயன் புகுதரும் போழ்தினான், ஆயிழாய்!
பின்னொடு நின்று .... படு மழை கொ ..... ல்
என்னொடு பட்ட வகை.

My friend of choice jewels! This is eventide when the cowherds return to their homes, adorning themselves with big garlands woven of Kuruntu flowers, when bee hives follow them with their sweet humming. Could this grief-striken state of mine, at this hour be the result of the rain that slowly follows the cowherds?
(The same situation)

3. பாலை

29

தலைமகன் செலவினைத் தலைமகட்குத் தோழி உணர்த்தியது
எழுத்துடைக் கல் நிரைக்க வாயில் விழுத் தொடை
அம் மாறு அலைக்கும் சுரம் நிரைத்து, அம் மாப்
பெருந் தகு தாளாண்மைக்கு ஏற்க அரும் பொருள்
ஆகும், அவர் காதல் அவா.

3. Pālai

Wealth, very rare to come by is the cherished target of our lover, quite befitting to his enterprising nature. That keen interest takes him through the barren tract where warriors with their unfailing arrows fight their foes - the arrows which are the means for planting memorial stones with epitaphs inscribed on them.
(The confidante informs the heroine of the proposed parting of the hero)

30

தலைமகனின் செலவு உடன்படாத தலைமகள் தோழிக்குச் சொல்லியது

வில் உழுது உண்பார் கடுகி அதர் அலைக்கும்
கல் சூழ் பதுக்கை ஆர் அத்தத்து இறப்பார்கொல் -
மெல் இயல் கண்ணோட்டம் இன்றி, பொருட்கு இவர்ந்து,
நில்லாத உள்ளத்தவர்?

The heart of our lover does not stay with us, as it is bound by his desire to come by riches; he is devoid of gentleness and grace; has he no concern for the dangers of the path through the wild where the brigands who live by the ploughshare of bows and who rush to assail the wayfarers and plunder their possessions and which is full of heaped up stones?
(The heroine who does not like the hero's parting speaks to her confidante)

31

பொருள்வயிற் பிரிந்துபோன தலைமகனைக் காய்ந்து தலைமகள் தானே கூறிக்கொண்டது

பேழ் வாய் இரும் புலி குஞ்சரம் கோள் பிழைத்துப்
பாழ் ஊர்ப் பொதியில் புகாப் பார்க்கும் ஆர் இடை,

சூழாப் பொருள் நசைக்கண் சென்றோர், அருள் நினைந்து,
வாழ்தியோ மற்று என் உயிர்?

O my soul! Would you still like to stay in my body, yearning for the grace of our lover who went in quest of riches, treading the wellnigh impassable barren tract, where a wide-mouthed huge tiger, which failed to kill its prey, an elephant, seeks food in the common yard of a ruined village?
(The heroine speaks to herself when the hero is away seeking his fortune)

32

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது
நீர் இல் அருஞ் சுரத்து ஆமான்இனம் வழங்கும்
ஆர் இடை அத்தம் இறப்பர்கொல்? - ஆயிழாய்! -
நாணினை நீக்கி, உயிரோடு உடன் சென்று
காண, புணர்ப்பதுகொல் நெஞ்சு?

One of beautiful ornaments! Our man treads a wellnigh impassable path through the waterless wild, where the flocks of wild cows roam about. My heart, forsaking sense of shame, very much covets to hold life and so proceeds to see him.
(The heroine speaks to her confidante who informed her of the hero's parting)

33

வரைவிடைப் பிரிவில் ஏதிலார் கூறும் அலர்கண்டு தலைமகள் ஆற்றாது தோழி கேட்டக் கூறியது
பொறி கிளர் சேவல் வரி மரல் குத்த,
நெறி தூர் அருஞ் சுரம் நாம் உன்னி, அறிவிட்டு
அலர் மொழிச் சென்ற கொடி அக நாட்ட,
வலன் உயர்ந்து தோன்றும் மலை.

It is a path coursing through the waste which is rare to tread and which gets covered with the particles from the striped maral blades which the wild cocks with bright dots on their heads pecked at.
(The heroine speaks to be heard by the confidante, resenting the gossip of the neighbours in the absence of the hero)

34

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது

பீர் இவர் கூரை மறு மனைச் சேர்ந்து அல்கி,
கூர் உகிர் எண்கின் இருங் கிளை கண்படுக்கும்,
நீர் இல், அருஞ் சுரம் முன்னி அறியார்கொல்,
ஈரம் இல் நெஞ்சினவர்?

Won't our loveless man consider the dangers posed by the dolorous path without water, where the crowds of sharp-clawed bears gather and sleep in the ruined homes on whose roofs spread the sponge-gourd creepers?
(The heroine expresses her disagreement when her friend informs her of the hero's parting)

35

இதுவுமது

சூரல் புறவின் அணில் பிளிற்றும் சூழ் படப்பை
ஊர் கெழு சேவல் இதலொடு போர் திளைக்கும்
தேரொடு கானம், தெருள் இலார் செல்வார்கொல்,
ஊர் இடு கவ்வை ஒழித்து?

Will our lover as a man devoid of discerning faculty proceed on his journey subjecting us to the village slander, through a waste of mirages, where in the hamlets surrounded by gardens

full of noise made by squirrels, the domestic cocks fight the ital birds?
(The same situation)

36

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த காலத்து ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பதுபட மொழிந்தது.

முள்ளுடை மூங்கில் பிணங்கியசூழ் படப்பை,
புள்ளி வெருகு தன் குட்டிக்கு இரை பார்க்கும்
கள்ளர் வழங்கும் சுரம் என்பர், காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

People say that the path which our lover's heart dared to travel is infested with roaming brigands, where mother cats with dots on them look for food for their kitten in the gardens fenced by thorny bamboo bushes.
(The heroine says she will bear the pangs of separation)

37

பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி உடன்படாது, தலைமகட்குப் பின்னர் நேரும் இன்னலினை எடுத்தியம்பியது

பொரி புற ஓமைப் புகர் படு நீழல்,
வரி நுதல் யானை பிடியோடு உறங்கும்
எரி மயங்கு கானம் செலவு உரைப்ப, நில்லா,
அரி மயங்கு உண்கண்ணுள் நீர்.

You propose to proceed through a forest path of blazing wild fire, where tuskers with striped foreheads sleep with their mates, in the dotted shades of Ōmai trees of parched trunks and branches. If I disclose this fact to my friend, her red-streaked and khol-fed eyes will be permanently streaming with tears.

(The confidante speaks to the hero when he informed her of his proposed parting)

38

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது

கோள் வல் ...... வய மாக் குழுமும்
தாள் வீ பதுக்கைய கானம் இறந்தார்கொல் -
ஆள்வினையின் ஆற்ற அகன்றவா நன்று உணரா
மீளி கொள் மொய்ம்பினவர்?

Has our valorous and puissant lover, blinded by his enthusiasm for accomplishing great tasks, failed to discern the benefit of staying with us and gone through a path where flocks of mighty tigers which have curved stripes on them and which are excellent hunters of other creatures, gather near heaps of stones with flower-rich growth of plants?
(The heroine expresses her disagreement to her friend who informed of the hero's parting)

39

இதுவுமது

கொடுவரி பாயத் துணை இழந்து அஞ்சி,
கடு உணங்கு பாறைக் கடவு தெவுட்டும்
நெடு வரை அத்தம் இறப்பர்கொல், கோள் மாப்
படு பகை பார்க்கும் சுரம்?

Will our lover decide to tread a path through the barren tract with extending hill-ranges, where amid the path coursing through the rocks, thick with wilting Kaṭu trees, a tusker awaits the arrival of a tiger, its foe, which killed its mate, and caused it run scared?
(The same situation)

40

தலைமகனின் வருகையினை எதிர்நோக்கில் கலங்கிய தலைமகட்குத் தோழி நிமித்தம் காட்டிக் கூறியது

மன்ற முது மரத்து ஆந்தை குரல் இயம்ப,
குன்றகம் நண்ணி, குறும்பு இறந்து சென்றவர்
உள்ளிய தன்மையர்போலும் - அடுத்து அடுத்து
ஒள்ளிய தும்மல் வரும்.

Our lover approached a montane region and has crossed many settlements in the barren tract. Now the owls which live in the aged trees in the village common hoot and I am inclined to sneeze quite often.[1] It seems our man will arrive here soon with the same intense love he had for us during the courting period.
(The confidante consoles the separated heroine citing auspicious omens)

41

இதுவுமது

பூங் கண் இடம் ஆடும்; கனவும் திருந்தின;
ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம் நினைப்ப,
வீங்கிய மென் தோள் கவினிப் பிணி தீர,
பாங்கத்துப் பல்லி படும்.

The moment we think of our man who trod a barren tract dight with sky-high mountain, our beautiful left eye throbs;[2] our dreams also are favourable; to add to these, the gecko also clicks from a favourable place.[3]
(The confidante cites good omens and consider the heroine who is expecting anxiously the return of her lover)

1, 2, 3. The ancient Tamils held these things as foretelling something good.

42

உடன் போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது
ஒல்லோம்! என்று ஏங்கி, உயங்கி இருப்பவோ?
கல் இவர் அத்தம், அரி பெய் சிலம்பு ஒலிப்பக்
கொல் களிறு அன்னான்பின் செல்லும்கொல், என் பேதை
மெல் விரல் சேப்ப நடந்து?

Does my daughter now follow her lover, a youth like a murderous tusker, through the barren tract full of rocks, her anklets inlaid with grains tinkling, and her tender toes turning ruddy or deciding it too difficult for her to walk the path, stays in a place enroute, grieving and wilting? (I am bewildered)
(The foster mother worries herself when the heroine eloped with her lover)

4. மருதம்

43

மகற்பெற்ற தலைமகளினைச் செய்பெரும் சிறப்பொடு சேர்தற்கண் தலைமகன் மகற்கண்டு மகிழ்ந்த வகையினைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறியது
ஆற்றல் உடையன், அரும் பொறி நல் ஊரன்,
மேற்றுச் சிறு தாய காய்வு அஞ்சி, போற்று உருவிக்
கட்டக முத்தின் புதல்வனை மார்பின்மேல்
பட்டம் சிதைப்ப வரும்.

4. Marutam

Our man of great valour and rare wealth now comes resembling a Vañci tree with small fruits on its top, holding his (little) son close to his breast, who resembles the pearl that falls off when the bamboo nodes explode, causing his upper garment deshaped in the process.

(The confidante happily speaks when the hero sees his newborn sow for the first time the day they celebrated the child birth)

44

பரத்தையிற் பிரிந்த தலைமகனைத் தலைமகள் காய்ந்து கூறியது

அகன் பணை ஊரனைத் தாமம் பிணித்தது
இகன்மை கருதி இருப்பல்; - முகன் அமரா
ஏதில் மகளிரை நோவது எவன்கொலோ,
பேதைமை கண்டு ஒழுகுவார்?

I nurtured hatred for the hetairas for their act of taking away with them, my lover who is the chief of a vast town full of paddy fields. But now I realise it is meaningless to do so, for they are our aliens who behave out of ignorance! Indeed it is our man whom I should find fault with.

(The heroine resents the act of her husband when he was taken away by the hetairar)

45

பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது

போத்து இல் கழுத்தின் புதல்வன் உணச் சான்றான்;
மூத்தேம் இனி யாம்; வரு முலையார் சேரியுள்,
நீத்து நீர் ஊன வாய்ப் பாண! நீ போய் மொழி;
கூத்தாடி உண்ணினும் உண்.

O pāṇa! As our son is in the stage to be breast-fed, there is no time left for our hero to throw his arms round our neck! Moreover, we have grown old (and so not fit to give company to our man.) So, may you leave from here and rush to the street of the courtesans with growing breasts and utter words (that may delight them) or resort to earn your

living, by dancing, coveting liquor and meat.
(The heroine refuses entry to the panan)

46

இதுவுமது

உழலை முருக்கிய செந் நோக்கு எருமை
பழனம் படிந்து, செய் மாந்தி, நிழல் வதியும்
தண் துறை ஊரன் மலர் அன்ன மார்புற,
பெண்டிர்க்கு உரை - பாண! - உய்த்து.

O pāṇa! Go and tell about the love, resembling the flowers buzzed by bees, of the chief of a cool ford, where a red-eyed buffalo which damaged the Ul̲alai[4]-wood tied to its neck, and enteres the fertile Marutam tract and grazes the crops in the paddy field and then abides in the shade of a (Marutu) tree, to his (favourite) hetairas.
(The same situation)

4. Ul̲alai : a block of wood suspended from the neck of a cow or buffalo to prevent it from going astray.

47

தலைமகளின் இல்லற இயல்பினைக் கண்டு மகிழ்ந்த செவிலி நற்றாய்க்கு உரைத்தது

தேம் கமழ் பொய்கை அக வயல் ஊரனைப்
பூங் கண் புதல்வன் மிதித்து உழக்க, ஈங்குத்
தளர் முலை பாராட்டி, என்னுடைய பாவை
வளர் முலைக்கண் ஞெமுக்குவார்.

While the comely-eyed son tramples with his feet the body of his father, the chief of a water-rich fertile land, dight with flower-rich fragrant ponds, the latter delights himself in pressing (gently) with his hand the nipples of the loosened and still growing breasts of our icon-like daughter.

(The foster mother speaks to the natal mother after a visit to the heroin's house)

48

தலைமகள் பாணற்கு வாயின் மறுத்தது
பேதை! புகலை; புதல்வன் துணைச் சான்றோன்
ஓதை மலி மகிழ்நற்கு யாஅம் எவன் செய்தும்?
பூ ஆர் குழல் கூந்தல் பொன் அன்னார் சேரியுள்
ஓவாது செல் - பாண! - நீ.

We are women who have our son as our refuge. Of what use are we to the chief of a noisy plain? Make your frequent visits to the street of his women, their tresses adorned with flowers who are charming like the goddess of plenty.
(The heroine refuses entry to the pāṇan, the messenger from the hero)

49

இதுவுமது
யாணர் நல் ஊரன் திறம் கிளப்பல்; என்னுடைய
பாண! இருக்க அது களை; நாண் உடையான்
தன் உற்ற எல்லாம் இருக்க; இரும் பாண!
நின் உற்றதுண்டேல், உரை.

O my pāṇa! Stop praising too much the greatness of the chief of a plain with ever fresh revenues. Put aside all that has happened to the chief of bashful nature. Tell me if you expect any favour from me!
(The same situation)

50

தலைமகன் பரத்தையிற்பிரியத் தலைமகள் புலந்து சொல்லியது

ஒள் இதழ்த் தாமரைப் போது உறழும் ஊரனை
உள்ளம் கொண்டு உள்ளான் என்று யார்க்கு உரைக்கோ? - ஒள்ளிழாய்! -
அச்சுப் பணி மொழி உண்டேனோ, மேல் நாள் ஓர்
பொய்ச் சூள் என அறியாதேன்?

The chief of the fertile plain where floods swell much and make noise! Don't embrace out of your boundless love for him; out of your ignorance don't grieve uttering lustful words to fulfil his desire. Hereafter do you too not embrace him in a manner that will satisfy him to the maximum; also do not plead with him for favour, uttering words of love to the extent his desire gets fulfilled.
(The heroine speaks out her feeling when the hero parted from her and went to visit his favourite hetaira)

51

இதுவுமது

பேதையர் என்று தமரைச் செறுபவோ?
போது உறழ் தாமரைக்கண் ஊரனை நேர் நோக்கி,
வாய் மூடி இட்டும் இருப்பவோ? - மாணிழாய்! -
நோவது என்? மார்பு அறியும், இன்று.

My friend of beautiful and great ornaments! Our man is the chief of a vast fertile domain rich in lotus flowers. His favourite women, in his absence, abuse him as senseless and hate him; but in his presence they become silent. Now it is painful to us. None but my heart knows it.
(The same situation)

52

பரத்தையரும் ஏனைத் தலைவியரும் தம்முறு விழுமம் கூறியபொழுது தலைமகள் அவர்கள்மாட்டுப் பிரிந்து கூறியது

காதலின் தீரக் கழிய முயங்கன்மின்;
ஓதம் துவன்றும் ஒலி புனல் ஊரனைப்
பேதைப் பட்டு ஏங்கன்மின் நீயிரும், எண் இலா
ஆசை ஒழிய உரைத்து.

O chief of a fertile land of cool fords where Varāl fish friscks away in the fords where people take drinking water! Is it becoming of you if you forsake your brightly bangled woman and visit the streets of other women and consider it a big achievement?
(The heroine speaks pitying the hetairas as well as other wives of the hero, when they complained of their pain due to the behaviour of the hero.)

53

தோழி, தலைமகளின் ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைவன் வயத்தனாய் நின்று தலைவியைக் கழறியது

உள் நாட்டம் சான்றவர் தந்த நசை இற்று என்று
எண்ணார்க்குக் கண்ணோட்டம் தீர்க்குதும் என்று எண்ணி,
வழிபாடு கொள்ளும் வள வயல் ஊரன்
பழிபாடு நின் மேலது.

Family life is one which was given to us by great men of supreme wisdom. Love is its bedrock! Your spouse, the lord of a village of fecund fields now nurtures great respect for you, having resolved to forsake his love for the hetairas. Blame will befall you if you refuse to accept him.
(The confidante appeals to the sulking heroine to accept her sponse who wishes reunion with his wife)

54

பரத்தைபாற் சென்று வந்த தலைமகனைத் தோழி வணங்கிய மொழியான் இணங்குவித்தது

உண் துறைப் பொய்கை வராஅல்இனம் இரியும்
தண் துறை ஊர! தகுவதோ - ஒண்டொடியைப்
பாராய், மனை துறந்து, அச் சேரிச் செல்வதனை
ஊராண்மை ஆக்கிக்கொளல்?

O chief of a fertile plain where in the ford people take drinking water, causing the schools of varāl fish to get scared away! Is it becoming of you to turn unfriendly toward your spouse of shining bracelets and forsake our home and visit the streets of the hetairas, deeming it a thing of pride to you? (The confidante speaks to the hero who returns home after visiting the street of the hetairas)

55

பாணற்கு வாயில் மறுத்தது

பொய்கை நல் ஊரன் திறம் கிளத்தல்! என்னுடைய
எவ்வம் எனினும், எழுந்தீக; வைகல்
மறு இல் பொலந் தொடி வீசும், அலற்றும்,
சிறுவன் உடையேன் துணை.

O pāṇaṉ! (Know) I have as my protector, my little son who plays, swinging his hands and unfolding this palms! So you need not speak at length the greatness of the chief of the water-rich plain. The separation of my man could even be due to my lapses! Leave from here at once!
(The heroine refuses entry to the pāṇaṉ)

56

பரத்தையிற் பிரிந்த தலைமகனின் வரவினை வேட்டுத் தோழி தலைமகட்குக் கூறியது

வள வயல் ஊரன் மருள் உரைக்கு மாதர்
வளைஇய சக்கரத்து ஆழி, கொளை பிழையாது,
ஒன்று இடைஇட்டு வருமேல், நின் வாழ் நாட்கள்
ஒன்றி அனைத்தும் உளேன்.

My friend! If our man, the chief of a village of fertile field frees himself from the hold of the hands, adorned with the curved wheel-like rings of the women of alluring speech and makes intermittent visits to us, I will feel delighted as if I were blessed with everything in life, after causing your reunion with your spouse.
(The confidante speaks to her friend with a desire that the hero should return from the hetaira's house)

5. நெய்தல்

57

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது

ஒழுகு திரைக் கரை வான் குருகின் தூவி
உழிதரும் ஊதை எடுக்கும் துறைவனைப்
பேதையான் என்று உணரும், நெஞ்சம்; இனிது உண்மை
ஊதியம் அன்றோ உயிர்க்கு?

5. Neytal

Friend! Is it not a benefit to our life to possess a heart that well realises the chief of the coast where the whirling wind lifts the feathers of the white herons in the shore where the waves come and go regularly, is ignorant?

(The reply of the heroine to her friend who pretends to blame the hero, when he stands concealed nearby)

58

வரையாது ஒழுகும் தலைமகன் ஒரு ஞான்று தோழியைக் கதுமென எதிர்ப்படத் தலைமகள் தன்னிலையினை தலைமகற்குக் கூறு எனத் தோழிக்குச் சொல்லியது

என்னைகொல்? தோழி! அவர்கண்ணும் நன்கு இல்லை;
அன்னைமுகனும் அது ஆகும்; பொன் அலர்
புன்னைஅம் பூங் கானற் சேர்ப்பனை, தக்க தேர்;
நின் அல்லது இல் என்று உரை.

What could be the reason? The behaviour of the chief is not favourable to me; our mother's face too indicates that she too is not equally favourable! Is the conduct of the chief of the shore land rich in punnai trees, full of beautiful flowers, becoming of him? Pray tell him I have no other refuge but him! (The hero who prolongs his courting period by chance confronts the confidante when the heroine requests her friend to express her state to him)

59

இரவுக்குறி வேண்டி வந்த தலைமகன் தலைமகளைக் காணாது சிறைப்புறத்தானாக, தோழி தலைமகள் அல்ல குறிப்பட்டமையினைத் தலைமகற்குக் கூறியது

இடு மணல் எக்கர் அகன் கானல் சேர்ப்பன்
கடு மான் மணி அரவம் என்று, கொடுங்குழை
புள் அரவம் கேட்டுப் பெயர்ந்தாள் - சிறு குடியர்
உள் அரவம் நாணுவர் என்று.

The heroine adorned with curved ear-steads mistook the chirping of birds for the tinkling of the bells worn round the

neck of the fleet-footed horse of the chief of the shore with groves and sand dunes, collected by the wind and waves and returned from the tryst, with the thought that her kin would discern the truth that this sound is the cause for the anguish in her heart.
(The hero who came seeking night-tryst stands concealed nearby, failing to meet his beloved when the confidante lets him know that her friend missed the signs he made previously)

60

தலைமகள் இரவுக்குறிக்கண் தலைமகன் தன்னைச் சார்ந்து பிரிந்த வழி உறக்கம் வாராமை கண்டு புலம்பித் தோழி கேட்ப உரைத்தது

மணி நிற நெய்தல் இருங் கழிச் சேர்ப்பன்
அணி நலம் உண்டு அகன்றான்; என்கொல், எம்போல்
தணி மணல் எக்கர்மேல் ஓதம் பெயர,
துணி முந்நீர் துஞ்சாதது?

The clear-watered sea whose waves dash against the sand dunes and retreat does not sleep? Is it because of the reason that the chief of the shore girt with big backwaters rich in sapphire-like neytal flowers forsook me after enjoying my feminine charm?
(The heroine who lost her sleep after a meeting with her lover during night reports her agony to her confidante)

61

தலைமகள், பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைமகன் வந்த ஞான்றும், பெறாத ஞான்றைத் துன்ப மிகுதியால் பெற்றதனையும் கனவுபோன்று கொண்டு இகழ்ந்து கூறியது

கண் திரள் முத்தம் பயக்கும் இரு முந்நீர்ப்
பண்டம் கொள் நாவாய் வழங்கும் துறைவனை

முண்டகக் கானலுள் கண்டேன் எனத் தெளிந்தேன்,
நின்ற உணர்வு இலாதேன்.

In our lovers sea-port vessels come in which articles are exported - the sea-port abounding in eye-like rounded pearls, I met him in the grove rich in the tāḻai bushes today. Yet, my feeling which abode in my heart before seeing him has gone now. Now I realise that union with him will be a source of pain. (The hero came to meet his beloved rarely after a long gap. She feels even the union with him is as painful as it was during the period of separation.)

62

அறத்தோடு நின்றபின் வரைவு நீட மற்றொரு குலமகளைத் தலைவன் வரையும்கொல் என்று ஐயுற்ற செவிலியின் குறிப்பறிந்து தோழி கூறியது

அடும்பு இவர் எக்கர் அலவன் வழங்கும்
கொடுங் கழிச் சேர்ப்பன் அருளான் எனத் தெளிந்து,
கள்ள மனத்தான் அயல் நெறிச் செல்லும்கொல்,
நல் வளை சோர, நடந்து?

He is the chief of a coastal land full of curved creeks, where on the sand dunes spread over by aṭampu creepers, the crabs crawl and play. Will he ever turn into a treacherous person and take to a sinful path, thus causing the heroine sporting comely bangles, to conclude that he has no compassion toward her and mentally suffer?
(The confidante speaks to the nurse who doubted if the hero would wed some other bride when the hero protracted the period of courtship)

63

சிறைப்புறமாக நின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குக் கூறி வரைவு கடாயது

கள் நறு நெய்தல் கமழும் கொடுங் கழித்
தண்ணம் துறைவனோ தன் இலன்; ஆயிழாய்!
வள்நகைப்பட்டதனை ஆண்மை எனக் கருதி,
பண் அமைத் தேர்மேல் வரும்.

Lass of beautiful jewels! The chief of the beautiful and cool ford with curved creeks where eye-like neytal flowers issue sweet fragrance is not different from what he was before! He proudly comes in his well-made charriot with the assumption that we are now in the hold of his beautiful hands, only due to his manliness.
(The confidante speaks to the heroine to be heard by the hero who stands concealed nearly, by way of urging him to wed per friend easty)

64

வரைவிடைப் பொருட்பிரிவில் தலைவன் நீட்டித்தவழித் தோழி அன்றிலோடு கூறியது

தெண் நீர் இருங் கழி, வேண்டும் இரை மாந்தி,
பெண்ணைமேல் சேக்கும் வணர் வாய்ப் புணர் அன்றில்!
தண்ணம் துறைவற்கு உரையாய், மடமொழி
வண்ணம் தா என்று தொடுத்து.

O inseparable anril pairs with curved beaks! You are now abiding on the palmyra palms after eating the fishes to your fill from the clear-watered creeks. Pray demand the chief of the cool ford to restore the virginity he took away from her (in the clandestine union).
(The confidante speaks to the anril bird, when the hero unduly delays the wedding, by staying away in another place, seeking riches to meet the expenses of the wedding)

65

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைமகள் வருந்திக் கூறியது

எறி சுறாக் குப்பை இனம் கலக்கத் தாக்கும்
எறி திரைச் சேர்ப்பன் கொடுமை அறியாகொல் -
கானகம் நண்ணி அருள் அற்றிடக் கண்டும்,
கானலுள் வாழும் குருகு?

He is the chief of a ford where the battering waves attack and cause the heap of frolicking sharks to get scattered. Are not the shore-living herons aware of the cruelty of the chief, even after they had known he had become merciless by his decision to tread the barren waste (Seeking riches?)
(The heroine speaks under the same situation)

66

வரைவிடைப் பொருட்பிரிவில் தலைமகன் நீட்டித்தவழித் தோழி தலைமகளோடு கூறியது

நுண் ஞாண் வலையின் பரதவர் போத்தந்த
பல் மீன் உணங்கல் கவரும் துறைவனைக்
கண்ணினால் காண அமையும்கொல்? என் தோழி
வண்ணம் தா என்கம், தொடுத்து.

He is the chief of the ford where the dry fish of the fisher folk, who netted very many fish kinds, casting their fine-stranded nets are plundered by birds. Are we fortunate enough to see him with our eyes my friend? Shall we follow him and demand the restoration of our once lost virginity?
(The confidante speaks to the heroine under the same situation)

67

தலைவன் தன்னை அருமை செய்து தலைமகளை மறந்த காலை தோழி அவனை எதிர்பட்டுக் கூறியது

இவர் திரை நீக்கியிட்டு, எக்கர் மணல்மேல்
கவர் கால் அலவன் தன பெடையோடு,
தவழும் இருங் கழிச் சேர்ப்ப! என் தோழி -
படர் பசலை பாயின்று - தோள்.

O chief of a coastal domain with matchless and big creeks where the male crabs with forked legs crawl and sport with their mates on the dunes of sand, thrown ashore by the sea waves that ascend on the shore! The shoulders of my friend have turned sallow (by your separation).
(The confidante speaks to the hero who seemed to forget the heroine)

68

தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள் பயிற்பிரிந்த காலத்துப் பிரிவு நீட்டித்துழித் தலைவி வருந்திக் கூறியது.

சிறு மீன் கவுள் கொண்ட செந் தூவி நாராய்!
இறு மென் குரல நின் பிள்ளைகட்கே ஆகி,
நெறி நீர் இருங் கழிச் சேர்ப்பன் அகன்ற
நெறி அறிதி, மீன் தபு நீ.

O crane endowed with red feathers with little fishes stored in your pouch! You alone are well aware of the path through which my lover left - the chief of a coastal region where you kill fishes in the flowing waters of the big creeks only for the sake of your suffering young ones which cry in gentle murmers![5]

(The heroine sorrowfully speaks when the hero extends the courting period, in his attempt to earn wealth for the wedding)

---

5. **Suggestion:** I have no other person to send as my messenger to him.

69

.... (முற்றும் சிதைந்தொழிந்தது)

70

.... (முற்றும் சிதைந்தொழிந்தது)

Note: The verses with the serial numbers 69 and 70 are missing in the old manuscripts.

மிகைப் பாடல்

கடவுள் வாழ்த்து

எண்ணும் பொருள் இனிதே எல்லாம் முடித்து, எமக்கு
நண்ணும் கலை அனைத்தும் நல்குமால் - கண்ணுதலின்
முண்டத்தான், அண்டத்தான், மூலத்தான், ஆலம் சேர்
கண்டத்தான் ஈன்ற களிறு.

Invocation

May the Elephant-faced God, begotten by Lord Siva who has a third eye on His forehead, who has the universe as His form, and whose throat is stained with the venom, help us accomplish in full, all that we wish for and also bless us with the knowledge of all arts available in the world.

- **Mūvātiyār**

❖ ❖ ❖

திணைமொழி ஐம்பது

(கண்ணஞ் சேந்தனார்)

1. குறிஞ்சி

1

அஞ்சி அச்சுறுத்துவது

புகழ் மிகு சாந்து எறிந்து, புல் எரி ஊட்டி,
புகை கொடுக்கப் பெற்ற புலவோர் துகள் பொழியும்
வான் உயர் வெற்ப! இரவின் வரல் வேண்டா,
யானை உடைய சுரம்.

Tiṇaimoḻi Aimpatu

1. Kuriñci

O chief of a sky-high mountain where the Celestials shower rains, pleased by the smoke-offering[1] given by the hunters by felling the famed sandal trees and burning them down! Pray avoid your nightly visits. The paths are infested with elephants.
(The companion of the heroine speaks to the hero)

1. People worshipping deities with flowers and incenses - Maturaikkāñci, 465 - 70, 476.

2

செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது

கண முகை கை எனக் காந்தள் கவின,
மண முகை என்று எண்ணி, மந்தி கொண்டாடும்
விறல் மலை நாட! வரவு அரிதாம்கொல்லோ?
புனமும் அடங்கின காப்பு.

O lord of a victorious mountain where abundant Kāntaḷ plants glow with beauty with their hand-like buds, which the female monkeys rejoice at mistaking them for the wedding-pālikai![2] Now the fields have ceased to be guarded by us. Our visit here will be rare!
(The companion of the heroine insists that the hero should wed her friend soon).

---

2. Pālikai - The mud-vessels in which seeds are sown and the sprouts are preserved to be used in the wedding ceremony.

3

தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது

ஓங்கல் இறு வரைமேல் காந்தள்கடி கவின,
பாம்பு என ஓடி, உரும் இடிப்ப, கண்டு இரங்கும்
பூங் குன்ற நாடன் புணர்ந்த அந்நாள் போலா,
ஈங்கு நெகிழ்ந்த, வளை.

Our lover is the chief of a beautiful land dight with hills. Here on the slopes of the lofty hill, the Kāntaḷ palnts look charming with their buds, which the thunderbolt mistakes for snakes and approaches with claps, causing lonely women grieve. These bangles that adorn my forearms are not of those days when we enjoyed his company. They have loosened now.
(The companion of the heroine speaks to her friend to be overheard by the hero who stands near the fence enclosing their house).

4

தலைமகனைத் தோழி இரவுக்குறி நயப்பித்தது

ஏனம் இடந்திட்ட ஈர் மணி கொண்டு, எல்லிடை,
கானவர் மக்கள் கனல் எனக் கை காய்த்தும்

வான் உயர் வெற்பன் வருவான்கொல், என் தோழி
மேனி பசப்புக்கெட?

In our lover's mountain, the boys and girls of the hunters warm their shivering bodies at night, with the help of the cool gems which the Kuravas had thrown away while ploughing their fields. Will the lofty hill-chief visit here and cause my friend's pallor disappear?
(The companion of the heroine speaks to her friend to be overheard by the hero).

5

பின்னின்ற தலைமகனைக் காவல் மிகுதி சொல்லிச் சேட்படுத்தது
விரை கமழ் சாரல் விளை புனம் காப்பார்
வரையிடை வாரன்மின்; - ஐய! - உரை கடியர்;
வில்லினர்; வேலர்; விரைந்து செல் அம்பினர்;
கல்லிடை வாழ்நர் எமர்.

O chief! Our kin who dwell on this mountain keep vigil over their crops in the slopes, fragrant with flowers. They are men of harsh words; wielders of bows and spears; shooters of fierce darts! Avoid visiting here.
(The companion of the heroine tells the hero about the confinement of her friend to her house).

6

இதுவுமது
யானை உழலும் அணி கிளர் நீள் வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்;
ஏனலுள், - ஐய! - வரவு மற்று என்னைகொல்?
காணினும், காய்வர் எமர்.

O chief! We are daughters of the hillsmen who dwell in the forest dight with hills where elephants roam about. Why do you visit our millet-field? Our people will be enraged even at the sight of you and even when they hear of your visit.
(The same situation)

7

இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது

யாழும் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி விறல் மலை நல் நாட!
மாழை மான் நோக்கியும் ஆற்றாள்; இர வரின்,
ஊர் அறி கௌவை தரும்.

O chief of a triumphant mountain whose cascades drop down sounding sweet like an orchestra of flute and drum! This girl, her glances charming like that of a doe's will not endure your nightly visits. Your visit will be cause for the village-gossip.
(The heroine's companion insists the hero on marrying her friend soon).

8

சேட் படை

வேங்கை மலர, வெறி கமழ் தண் சிலம்பின்
வாங்கு அமை மென் தோள் குறவர் மகளிரேம்;
சோர்ந்து குருதி ஒழுக, மற்று இப் புறம்
போந்தது இல், - ஐய! - களிறு.

O chief! We, the daughters of the Kur̲avas are girls of soft shoulders like the bamboos growing on the cool hill, fragrant with Vēṅkai flowers. We never witnessed here an elephant that ran dripping with blood.

(The heroine's companion distances the hero who stands behind her begging for her favour to meet the heroine).

9

தோழி தலைமகனை இரவுக்குறி நயப்பித்தது

பிணி நிறம் தீர்ந்து, பெரும் பணைத்தோள் வீங்க,
மணி மலை நாடன் வருவான்கொல், - தோழி! -
கணி நிற வேங்கை மலர்ந்து, வண்டு ஆர்க்கும்
மணி நிற மாலைப் பொழுது?

O my friend! Will our lover, the chief of a beautiful mountain visit here and cause our body free from the pallor? Will his visit cause our bamboo - like shoulders swell up? Will he visit here during this evening, sapphire-like, when the bees hum sweet around the oracular[3] Vēṅkai trees in full bloom? (The companion of the heroine speaks to the heroine to be heard by the hero).

3. The blossoming of the Vēṅkai signifies the advent of the marriage season. Ref : Verse 2 of the Akanāṉūṟu.

10

தலைமகன் சிறைப்புறத்தானாக, படைத்து மொழி கிளவியால், தோழி வரைவு கடாயது

பலவின் பழம் பெற்ற பைங் கண் கடுவன்,
எல! என்று இணை பயிரும் ஏகல் சூழ் வெற்பன்
புலவும் கொல்? - தோழி! - புணர்வு அறிந்து, அன்னை
செலவும் கடிந்தாள், புனத்து.

O my friend! Our lover is the chief of a land girt with lofty hills where a green-eyed male monkey which got a jack fruit calls its loving mate to share it with her.[4] Knowing of our kinship with him, our mother prevents us from visiting the millet field.

(The heroine's friend insists the hero on marrying her friend soon, pretending to speak to her friend)

4. Refer : Verse 352 of Akanāṉūṟu.

2. பாலை

11

தலைமகனது செலவு உணர்ந்து, வேண்டாத மனத்தாளாய், தலைமகள் தோழிக்குச் சொல்லியது

கழுநீர் மலர்க் கண்ணாய்! கௌவையோ நிற்க,
பொருள் நீரார் காதலர் பொய்த்தனர், நீத்தார் -
அழி நீர ஆகி, அரித்து எழுந்து தோன்றி,
வழி நீர் அறுத்த சுரம்.

2. Pālai

O girl with your eyes resembling the water-lily flowers! Ignore the gossip of the villagers. Our lover parted from us questing after riches, against all his promises and braved a fully ruined wilderness where the wild streams had washed away the plants and eroded the paths.

(The heroine speaks to her friend expressing her unwillingness for the parting of the hero)

12

யான் பிரியத் தலைமகள் ஆற்றுமோ? நீ அறிவாயாக! என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது

முரி பரல ஆகி, முரண் அழிந்து தோன்றி,
எரி பரந்த கானம் இயை பொருட்குப் போவீர்;
அரி பரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்
தெரிவார் யார், தேரும் இடத்து?

O chief questing after riches which bring every comfort of life! You intend to brave a wilderness dight with broken gravel. The wilderness has lost all its strength. It is consumed by the engulfing wild fire. This girl with her khol-fed eyes streaked red, will not endure the pangs of separation. Alas, there is none else but you to understand her suffering!

(The companion of the heroine speaks to the hero before his parting)

13

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

ஓங்கு குருந்தோடு அரும்பு ஈன்று பாங்கர்
மராஅ மலர்ந்தன, தோன்றி; விராஅய்க்
கலந்தனர் சென்றார் வலந்த சொல் எல்லாம் -
பொலந்தொடீஇ! - பொய்த்த குயில்.

The Marām trees have blossomed together with the kuruntu trees; our lover who was ever with us has now deserted us. These koels of dulcet notes have falsified all his plighted words!

(The grieving heroine speaks to her friend at the advent of the season).

14

இதுவும் அது

புன்கு பொரி மலரும் பூந் தண் பொழில் எல்லாம்
செங் கண் குயில் அகவும் போழ்து கண்டும்,
பொருள் நசை உள்ளம் துரப்ப, துறந்தார்
வரு நசை பார்க்கும், என் நெஞ்சு.

O friend! Our lover parted from us goaded by his greed for wealth, in spite of his knowing that the season was spring, when all over the cool and comely grove, the red-eyed koels cooed sweet and the Punnai flowers unfolded resembling the roasted grains. My heart eagerly awaits his arrival.
(The same situation)

15

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது

சிறு புன் புறவொடு சிற்றெழால் சீறும்
நெறி அரு நீள் சுரத்து அல்குவர்கொல், - தோழி! -
முறி எழில் மேனி பசப்ப, அருள் ஒழிந்து,
ஆர் பொருள் வேட்கையவர்?

O friend! Our lover parted from us quite gracelessly. He went away with his heart questing after huge wealth and caused our shoot-like bodies turn sallow. Does he now abide in the extensive wilderness with hazardous paths where the dull-hued small doves war with the small vultures?
(The heroine speaks to her friend who fears that the former cannot endure the pangs of separation)

16

புணர்ந்து உடன்போகிய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டு சொல்லியது

கருங் கால் மராஅ நுணாவோடு அலர,
இருஞ் சிறை வண்டுஇனம் பாலை முரல, -
அரும்பிய முள் எயிற்று அம் சொல் மடவாய்! -
விரும்பு, நாம் செல்லும் இடம்.

Young lass of emerging out sharp rows of teeth and sweet words? Along our path, the dark-trunked Marām trees are

in full bloom along with the Nuṇavam trees. The big-winged bees pour out their sweet Pālai melody.[5] Be pleased to walk with me through this path.
(The hero speaks to his beloved during their elopement)

5. The name of a melody relating to the Pālaittiṇai. It includes in it many submelodies namely, Cempālai, Paṭumalaippālai, Cevvaḻippālai, Arumpālai, Kōṭippālai, Mēlcempālai and Viḷarippālai.

17

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது

கல் அதர் வாயில், கடுந் துடிகள் பம்பும்
வில் உழுது வாழ்நர் குறும்புள்ளும், போவர்கொல் -
எல் வளை மென் தோள் நெகிழ, பொருள் நசைஇ,
நல்காத் துறந்த நமர்?

Our lover parted from us lovelessly, goaded by his heart questing after riches; our soft shoulders adorned with shining bangles have drooped. Does he now pass through the villages of the brigands who live by the bow, their ploughshare? Does he brave their villages hard by rocky paths, in every foreyard of whom the Tuṭis[6] of fearful sound reverberate?
(The heroine assures her friend that she can endure the pangs of separation).

6. A drum-kind of the ancient Tamils. It resembled an hour-glass. It is also called Uṭukkai (Puṟanāṉūṟu 70).

18

செலவுக் குறிப்பு அறிந்த தலைமகள் உடன்படாது சொல்லியது

கதிர் சுட, கண் உடைந்து, முத்தம் சொரியும்
வெதிர் பிணங்கும் சோலை வியன் கானம் செல்வார்க்கு
எதிர்வன போலிதே? எல் வளையோ, கொன்னே
உதிர்வன போல உள!

O my friend! Our lover is all set to go through an extensive wasteland dight with groves which are rich in entangled bamboo bushes which shed their pearls when the aestival heat causes their nodes explode. My shining bangles do not seem to agree to his parting from us. They slip off my hands. (The heroine speaks to her friend expressing her unwillingness to the hero's parting)

19

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது

கலையொடு மான் இரங்கு கல் அதர் அத்த
நிலை அஞ்சி, நீள் சுரத்து அல்குவர்கொல்? - தோழி! -
முலையொடு சோர்கின்ற, பொன் வண்ணம்; அன்னோ!
வளையொடு சோரும், என் தோள்.

O my friend! Would our lover, out of his fear, stay in the extensive wilderness dight with rocky paths where the bucks and does grieve? My golden hue dies together with the charm of my breasts. Alas, my shoulders wilt away and bangles slip. (The heroine assures her friend that she can endure the pangs of separation).

20

மகட் போக்கிய நற்றாய் சொல்லியது

ஏற்றிய வில்லின் எயினர் கடுஞ் சுரம்,
பாற்றினம் சேரப் படுநிழல் கண்டு அஞ்சி,
கூற்று அனை வல் வில் விடலையோடு என் மகள்
ஆற்றும்கொல், ஐய நடந்து?

Is my daughter strong enough to follow her lover, a youth who can strike like Death and who wields a strong bow? Alas, she would get scared at the sight of the shade cast by the flying kites in the wilderness, the abode of the hunters who are ever-poised to shoot arrows at the wayfarers.
(The foster mother laments over the elopement of her daughter with her lover)

3. முல்லை

21

தலைமகன் வரைவு மலிந்தது தோழி தலைமகட்குச் சொல்லியது

அஞ்சனம் காயா மலர, குருகிலை
ஒண் தொடி நல்லார் முறுவல் கவின் கொள,
தண் கமழ் கோடல் துடுப்பு ஈன, காதலர்
வந்தார்; திகழ்க, நின் தோள்!

3. Mullai

The kāyā has blossomed like the collyrium, the Kurukkatti leaves look charming like the rows of teeth of girls with shining bangles and the fragrant and cool kāntal flowers have unfolded like the oars of boats. May your shoulders swell up! Our lover has come with the wedding proposal!
(The friend of the heroine happily announces that the hero comes with the wedding proposal).

22

தோழி பருவம் காட்டி, தலைமகளை வற்புறுத்தியது

மென் முலைமேல் ஊர்ந்த பசலை மற்று என் ஆம்கொல்?
நல் நுதல் மாதராய்! - ஈதோ நமர் வருவர்;
பல் நிற முல்லை அரும்ப, பருவம் செய்து,
இன் நிறம் கொண்டது, இக் கார்.

O my friend of comely forehead! Our lover will arrive here eft soon. The clouds have caused the Mullai vines to put forth buds, shining like the bright teeth and the clouds have turned dark and charming. What harm can the pallor do to you hereafter?
(The companion of the heroine consoles her friend at the advent of the rainy season).

23

இதுவுமது

சென்றார் வருவர்; செறிதொடீஇ! கார் இஃதோ,
வெஞ் சின வேந்தர் முரசின் இடித்து உரறி,
தண் கடல் நீத்தம் பருகி, தலைசிறந்து,
இன்றையின் நாளை மிகும்.

O girl with serried bangless! Our lover will arrive here instantly. See how the clouds rumble like the drums of the angry kings! See how the clouds, after drinking from the sea now pour the seasonal rain that increases day by day!
(The same situation)

24

இதுவுமது

செஞ் சுணங்கின் மென் மலையாய்! சேர் பசலை தீர்; இஃதோ
வஞ்சினம் சொல்லி வலித்தார் வரு குறியால்;
வெஞ் சினம் பொங்கி, இடித்து உரறிக் கார் வானம்
தண் பெயல் கான்ற, புறவு.

O friend with beautiful yellow spots on your delicate breasts! May the pallor on your body disappear! See all the signs which our lover suggested have appeared. The seasonal rains have poured in the woods with claps of thunder, as if the clouds would rise in anger.
(The same situation)

25

இதுவு மது
கரு இயல் கார் மழை கால் கலந்து ஏந்த,
உருகு மட மான் பிணையோடு உகளும்; -
உருவ முலையாய்! - நம் காதலர் இன்னே
வருவர்; வலிக்கும் பொழுது.

O my friend with shapely breasts! The young bucks weakened by the aestival heat have now started frolicking with their loving mates on seeing the dark and pregnant clouds shooting up in the sky, lifted by the winds. The season confirms our lover's speedy arrival.
(The same situation)

26

இதுவு மது
இருங் கடல் மாந்திய ஏர் கொள் எழிலி
கருங் கொடி முல்லை கவின முழங்கி,
பெரும் பெயல் தாழ, பெயர் குறி செய்தார்;
பொருந்த நமக்கு உரைத்த போழ்து.

O my friend! Our lover parted from us after convincing us. He promised to be back here and marked for his return the season, when the charming clouds would drink from the sea, rumble aloud and pour heavily to cause the dark vines of the mullai to flourish with buds.
(The same situation)

27

இதுவுமது

ஆயர் இனம் பெயர்த்து, ஆம்பல அடைதர,
பாய முழங்கி, படு கடலுள் நீர் முகந்து,
மா இரு ஞாலம் இருள் கூர் மருள் மாலை -
சேயவர், செய்த குறி.

O friend! Our lover parted from us and went away to a distant land. He marked for his return the bewildering evening hour in this season, when the cowherds take their herds to their houses the while blowing their āmpal[7] pipes and when the clouds clap and scoop the water from the sea and cause the wide world get engulfed by darkness.
(The same situation)

---

7. Variously interpreted as a pipe made of the āmpal leaf, a melody-type and a pipe provided with a part called **Aṇaicu** in the shape of a water-lily flower. (Ref. p.233 of the Madras Lexicon, Vol.I, 1982).

28

பருவம் காட்டிய தோழி வற்புறுத்தியது

அதிர் குரல் ஏறொடு அலை கடல் மாந்தி,
முதிர் மணி நாகம் அனுங்க முழங்கி,
கதிர் மறை மாலை, கனை பெயல் தாழ,
பிதிரும் முலைமேல், சுணங்கு.

This is the evening hour when the sun sets in the west. Now the densely dark clouds, having drunk from the wavy sea, pour heavily with the roar of the thunderbolt that causes to grieve the gem-endowed snakes.[8] At this, yellow spots spread all over our breasts as if they were scattered on them by somebody.

(The friend of the heroine consoles her friend at the advent of the rainy season)

---

8. An ancient belief that the cobra has a gem with it. (Nākarattinam). There are many references to this belief in the ancient poems. Kurun: 239; Akam: 92, 372.

29

இதுவுமது

கோடல்அம் கூர்முகை கோள் அரா நேர் கருத,
காடு எலாம் கார் செய்து, முல்லை அரும்பு ஈன,
ஆறு எலாம் நுண் அறல் வார, அணியிழாய்!
போதராய்; காண்பாம், புறவு.

O friend with beautiful jewels! By the seasonal rains, the Kāntaḷ buds, sharp-tipped and comely, appear like the mighty snakes. The mullai creepers put forth their silvery buds. The paths are full of fine and black sand run over by rain water. Let us enjoy the beauty of the woods!
(The same situation)

30

இதுவுமது

அருவி அதிர, குருகிலை பூப்ப,
தெரி ஆ இனநிரை தீம் பால் பிலிற்ற, -
வரி வளைத் தோளி! - வருவார் நமர்கொல்?
பெரிய மலர்ந்தது இக் கார்.

O girl whose shoulders are adorned with beautiful bangles! These clouds pour heavily causing the cascades drop down with great din and the kuruntu trees unfold their leaves and the herds of cows pour their sweet milk. It seems our lover will arrive here eft soon!
(The same situation)

4. மருதம்

31

தலைமகள் வாயில் மறுத்தது

பழனம் படிந்த படு கோட்டு எருமை
கழனி வினைஞர்க்கு எறிந்த பறை கேட்டு,
உரன் அழிந்து, ஓடும் ஒலி புனல் ஊரன்
கிழமை உடையன், என் தோட்கு.

4. Marutam

Our lover is the chief of a fertile plain where a big-horned buffalo-bull that sports in the pond runs scared on hearing the report of the drums of the working husbandmen. He is the rightful owner of my shoulders. (This is enough for me. I need nothing more)
(The heroine refuses entry to the hero who returns from the house of his hetaira).

32

இதுவுமது

கணைக் கால் நெடு மருது கான்ற நறுந் தாது
இணைக் கால நீலத்து இதழ்மேல் சொரியும்
பணைத் தாட் கதிர்ச் செந்நெல் பாய் வயல் ஊரன்
இணைத்தான், எமக்கும் ஓர் நோய்.

Our lover is the lord of a village in a vast plain. In his village, the fragrant pollen of the tall and huge - trunked Marutu trees are poured on the petals of the blue lilies with fleshy stalks which flourish amidst the tall and dense paddy crops, loaded with ears. He has inflicted on us a disease, the pallor, (besides giving the hetairas the joy of union).
(The same situation)

33

தோழி வாயில் மறுத்தது
கடையாயார் நட்பேபோல், காஞ்சி நல் ஊர!
உடைய இள நலம் உண்டாய்; கடை, அக்
கதிர் முலை ஆகத்துக் கண் அன்னார் சேரி
எதிர் நலம் ஏன்று நின்றாய்.

O chief of a village rich in the kāñci trees! You enjoyed the feminine charm of your young spouse; you also stood in the streets of the courtesans, yearning for the enjoyment of the charm of your young hetaira, whose breasts glow with charm and who is so dear to you even like your eyes. This is the nature of the kinship with the men of the last sort!
(The heroine's friend refuses entry to the hero).

34

தலைமகள் பாணற்கு வாயில் மறுத்தது
செந்நெல் விளை வயல் ஊரன், சில பகல்,
தன் நலம் என் அலார்க்கு ஈயான்; எழு - பாண! -
பாரித்த அல்குல் பணைத்தோளார் சேரியுள்,
வாரிக்குப் புக்கு, நின்று, ஆய்!

In the past, the chief of the village with paddy-fields refused to offer joy to none but me. But now he has changed! O pāṇa! You may visit the streets of the hetairas and prove how generously he showers pleasure on them whose forelaps are broad and shoulders are shapely!
(The heroine replies to the pāṇan̲ who requests her to admit the hero into the house)

35

இதுவுமது

வேனில் பருவத்து எதிர் மலர் ஏற்று ஊதும்
கூனி வண்டு அன்ன குளிர் வயல் நல் ஊரன்
மாண் இழை நல்லார் இள நலம் உண்டு, அவர்
மேனி ஒழியவிடும்.

Our lover is the chief of a village rich in paddy fields. He is like the bent-winged beetle that buzzes the available flowers during the summer season! He enjoys the charm of the women adorned with precious jewels and forsakes them, once their beauty is gone!

(The same situation)

36

தோழி வாயில் நேர்வாள் கூறியது

செந்தாமரை மலரும் செய் வயல் நல் ஊர!
நொந்தால் மற்று உன்னைச் செயப்படுவது என் உண்டாம் -
தந்தாயும் நீயே; தர வந்த நல் நலம்
கொண்டாயும் நீ ஆயக்கால்?

O cheif of a plain where the red-lotus burgeons everywhere! What fruit will bear our finding fault with you? After all we cannot punish you in any manner![9] You are the man responsible for my friend's charm. You are also the person responsible for its loss!

(The heroine's friend speaks to the hero with an intension to admit the hero into the house)

---

9. The general state of the Indian women is expressed in this poem.

37

பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது

பல் காலும் வந்து பயின்று உரையல்! - பாண! - கேள்:
நெல் சேர் வள வயல் ஊரன் புணர்ந்த நாள்,
எல் வளையம்; மென் தோளேம்; எங்கையர்தம் போல
நல்லவருள் நாட்டம் இலேம்.

O Pāṇa! Do not visit here very often and repeat your patron's praise. In the past, our shoulders had easy access to the chief of the village of fertile fields! We with shining bangles, now do not enjoy the grace of our man as do the hetairas, our younger sisters![10]
(The heroine refuses entry to the Panan)

10. To treat the hetaira as the younger sister of the heroine is a common trend found in the ancient Akam texts.

38

இதுவு மது

நல் வயல் ஊரன் நலம் உரைத்து, நீ - பாண! -
சொல்லின் பயின்று உரைக்க வேண்டா; ஒழிதி, நீ!
எல்லு நல் முல்லைத் தார் சேர்ந்த இருங்கூந்தல்
சொல்லும், அவர் வண்ணம் சோர்வு.

O pāṇa! Do not repeat the praise of the chief of the village with fertile fields of paddy! We ourselves know of them. Leave from here! Even the hetaira wearing on her hair the purely white mullai flowers is eloquent about his great love toward her and also his indifference toward me!
(The same situation)

39

வாயில் வேண்டிச் சென்றார்க்குத் தலைமகள் வாயில் மறுத்தது

கருங் கயத்து ஆங்கண் கழுமிய நீலம்
பெரும் புற வாளைப் பெடை கதூஉம் ஊரன்
விரும்பு நாள் போலான்; வியல் நலம் உண்டான்;
கரும்பின் கோது ஆயினேம் யாம்.

The chief of the village where the broad-backed Vāḷai fish grazes the blue lilies in the large tank is not that man of old, who loved us so dearly! He has changed! Having enjoyed our feminine charm, he has foresaken us! We are like the bagasse which is thrown off after crushing the sugarcane for juice!
(The heroine refuses entry to those who approach her as the messengers of the hero)

40

இந்த நிலத்தின்கண் இன்ன பெற்றியால் வருவாயாக! எனச் சொல்லியது

ஆம்பல் அணித் தழை ஆரம் துயல்வரும்
தீம் புனல் ஊரன் மகள் இவள்; ஆய்ந்த நறுந்
தே மலர் நீலம் பிணையல்; செறி மலர்த்
தாமரை, தன்னையர் பூ.

O chief! My friend is the daughter of the chief of a fertile land abounding in sweet water. On her body sways the garment wrought of the Āmpal flowers and the sandal leaves; her favourite wreath is wrought of the fragrant blue lily blooms; what her elders prefer is the garland of lotus flowers!
(The friend of the heroine speaks to the hero during premarital love)

5. நெய்தல்

41

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்த தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது

நெய்தல் படப்பை நிறை கழித் தண் சேர்ப்பன்
கைதை சூழ் கானலுள் கண்ட நாள்போல் ஆனான்;
செய்த குறியும் பொய் ஆயின; - ஆயிழையாய்! -
ஐதுகொல், ஆன்றார் தொடர்பு?

5. Neytal

O friend of choice jewels! Our lover is the lord of a cool littoral land with flooded creeks and gardens abounding in the Neytal flowers. When our lover met us for the first time in the grove rich in the screwpine bushes, we were so rare to him. Alas, now he has become rare to us! All his signs for the tryst by night have failed. I fear our kinship with him will cease to be.
(The friend of the heroine speaks to her friend to be overheard by the hero who waits near the fence enclosing their house)

42

தோழி வரைவு கடாயது

முத்தம் அரும்பும் முடத் தாள் முது புன்னை
தத்தும் திரை தயங்கும் தண் அம் கடற் சேர்ப்ப!
சித்திரப் பூங் கொடி அன்னாட்கு அருளியாய்,
வித்தகப் பைம் பூண் நின் மார்பு!

O chief of a sea-shore land of leaping waves! On your shore, the bent-trunked and aged Punnai trees glow with their

pearl-like buds. May your chest adorned with precious golden jewels, by its embrace, shower its inherent joy on my vine-like friend!
(The friend of the heroine persuades the hero to wed her friend soon).

43

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்த தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது

எறி சுறா நீள் கடல் ஓதம் உலாவ,
நெறி இறாக் கொட்கும் நிமிர் கழிச் சேர்ப்பன், -
அறிவு அறா இன் சொல் அணியிழையாய்! - நின் இல்
செறிவு அறா, செய்த குறி.

Our lover is the lord of a littoral land. Here, the creeks are flooded and the killer sharks are frolicking in the waves that move forward and backward, while the beautifully striped shrimps roam about. O my friend with sweet and unforgettable words! One wearing beautiful jewels! Countless are the signs which our lover had made near our house! But all have proved futitle!
(The companion of the heroine who was misled by wrong signs speaks to her friend to be overheard by the hero who stands near the fence).

44

தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது

இன மீன் இருங் கழி ஓதம் உலாவ,
மணி நீர் பரக்கும் துறைவ! தகுமோ -
குண நீர்மை குன்றாக் கொடி அன்னாள் பக்கம்
நினை நீர்மை இல்லா ஒழிவு?

O chief of a land where by the waves of the sea with sapphire-like water, the creek becomes flooded and abounds in fishes. Is it becoming of your greatness to be so oblivious of your beloved's plight who is a liana-like girl endowed with virtuous qualities?
(The friend of the heroine persuades the hero to wed her friend soon).

45

இதுவு மது
கடல் கொழித்திட்ட கதிர் மணி முத்தம்
படம் அணி அல்குல் பரதர் மகளிர்
தொடலை சேர்த்து ஆடும் துறைவ! என் தோழி
உடலும், உறு நோய் உரைத்து.

O chief of a littoral region with curved creeks where the cranes make noise from the fragrant groves! May your visits be frequent so that my friend may be free from the mental agony that erodes her comely complexion!
(The same situation)

46

இதுவு மது
முருகு இயல் கானல் அகன் கரை ஆங்கண்
குருகுஇனம் ஆர்க்கும் கொடுங் கழிச் சேர்ப்ப!
மருவி வரலுற வேண்டும், என் தோழி
உரு அழி உள் நோய் கெட.

O lord of a littoral domain with fragrant groves along the beach, its winding back-waters resounding with the noise of the grazing birds! I very much long for your arrival here with your proposal to wed my friend and thus put an end to the grief that abides in her heart, destroying all her charm!
(The same situation)

47

தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழியால் சொல் எடுக்கப்பட்டு, தலைமகள் சொல்லியது

அணி பூங் கழிக் கானல், அற்றை நாள் போலான்;
மணி எழில் மேனி மலர் பசப்பு ஊர,
துணி கடற் சேர்ப்பன் துறந்தான்கொல்? - தோழி! -
தணியும், என் மென் தோள் வளை.

O my friend! Our lover, the chief of a ford with clear water is not the man whom we met during those days in the seashore grove beside the flowery creek. He is now different! By his parting, our gem-hued body has turned sallow like the sponge-guord flower. My bangles slip from my soft arms.

(The heroine speaks to her friend to be overheard by the hero who waits near the fence enclosing their house)

48

தோழி தலைமகளை இரவுக்குறி நயப்பித்தது

கறங்கு மணி நெடுந் தேர் கண் வாள் அறுப்ப,
பிறங்கு மணல்மேல் அலவன் பரப்ப,
வறம் கூர் கடுங் கதிர் வல் விரைந்து நீங்க,
நிறம் கூரும் மாலை வரும்.

O my friend! The tall chariot of our lover with tinkling bells will course through our beach of shining sand, causing the crabs to rush up scared and blinding the eyes of men during the evening, when the sky turns ruddy and the hot sun-rays get their fierceness abated!

(The companion of the heroine persuades her friend to agree for the tryst by night).

49

தலைமகன் பாங்கற்குச் சொல்லியது

மயில்கொல்? மடவாள்கொல்? மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வம்கொல்? - கேளீர்! - குயில் பயிரும்
கன்னி இள ஞாழல் பூம் பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும், என் நெஞ்சு.

O my friends! Is it a pea-fowl? Is she a young girl? Is it a deity that lives amidst the waves of the flooded sea? The grief of my heart is far more intense than that of my eyes, which beheld the figure amidst a flowery grove rich in the virgin Gnazhal trees from where the koels call in their sweet voice.[11]
(The hero speaks to his friends)

---

11. The verse is an echo of the couplet 1081 of the sacred Tirukkuṟaḷ : 'Goddess? or pea-fowl rare? She whose ears rich jewels wear; Is she a maid of human kind? All wildered is my mind' - G.U. Pope.

50

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய், தோழி வரைவு கடாயது

